



# தமிழரசு

16.11.1996 ரூ.3



RODDING
SEWAGE
TYPES

# இந்த இதழில் ...


★ அரசுப் பணியாளர்கள் இல்லாவிட்டால் திட்டமில்லை
-முதல்வர் கலைஞர் ........ 2

★ தம்பிக்கு
-எழிற்பித்தன் ........ 6

★ கூட்டுறவே நாட்டுயர்வு ........ 7

★ மாநகராட்சித் தலைவர்களின் பதவியேற்பு நிகழ்ச்சிகள் ........ 9

★ செய்திச்சரம் ........ 14

★ வாழ்வோர் யார்?
கவிஞர் கா. வேழவேந்தன் ........ 15

★ வாசகர் இதயம் ........ 17

★ குறட்டை ஒலி
-டாக்டர் மு.வ. ........ 18

★ ஹோமியோபதி மருத்துவம் ........ 23

★ அவனி போற்றும் 6 மாதச் சாதனை குப்பையிலிருந்து மின்சாரம் ........ 30

★ நிலமடந்தை
-முனைவர் சிலம்பொலி செல்லப்பன் ........ 34

★ கைத்தறிக் கூட்டுறவாளர் ........ 39

★ மாநகராட்சி மேயர்கள் ........ 43

★ சிறுமையும் பெருமையும் ........ 44

★ அறிவியல் துளிகள் ........ 47

★ ஆசிரியர் மடல் ........ 48



தமிழரசு
திருவள்ளுவராண்டு: 2027
கார்த்திகைத் திங்கள் : 1
மலர்: 27
இதழ்: 10
16.11.1996
விலை: ரூ. 3



# அரசுப்பணியாளர்கள் இல்லாவிட்டால் திட்டமில்லை!

— முதல்வர் கலைஞர் —

தலைமையுரை ஆற்றிய மாநாட்டினுடைய தலைவர் பாலசுப்பிரமணியம் அவர்களைப் பற்றி நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாநிலச் செயலாளர் நல்லகண்ணு குறிப்பிடும்போது, பால சுப்பிரமணியத்தின் நீண்ட உரையைக் கேட்டு மகிழ்ந்ததாகவும், அந்த உரையில் பிணைந் திருந்த தமிழ் மொழியின் அழகைப் பெரிதும் வியந்து ரசித்ததாகவும் குறிப்பிட்டார். நானும் கூட அவருடைய உரையிலே மயங்கிப் போய் என்னென்ன கோரிக்கைகளை வைத்தார் என்பது தெரியாமலே உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கின்றேன். மற்ற கோரிக்கைகள் இருக்கட்டும். இவ்வளவு அழகான தமிழில் ஒரு அழகான அருமை யான உரையை ஆற்றி நம்மை எல்லாம் மகிழ்வித்து இளமைக் காலம் முதல் தான் கொண்டுள்ள போர்க்குணம் மாறாத சிறுத்தையாக விளங்குகின்ற அவர் மீது பழி வாங்குகிற நடவடிக்கைகள் கடந்த காலத் திலே எடுக்கப்பட்டன என்பதை என்னுடைய கவனத்திற்கு இங்கே கொண்டு வந்தார். அந்த நடவடிக்கைகள் நிச்சயமாக நீக்கப்படும் என்ற உறுதியை, அவரைப் போல நடவடிக்கை களுக்கு உள்ளானவர்கள் மீது இருக்கின்ற அந்தக் கொடுமைகளும் அகற்றப்படும் என்ற உறுதியை முதற் கண் நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

அரசு ஊழியர்கள் என்றும், அரசு அலுவலர்கள் என்றும், அரசுப் பணி யாளர்கள் என்றும் பல் பெயரிட்டு அழைக்கப்பட்டாலும்கூட நீங்களெல்லாம் அரசின் ஆணிவேர்களாக இருக்கிறீர்கள் என்பதை என்னைப் போன்றவர்கள் என்றைக்கும் மறந்துவிட முடியாது. உங்களுடைய கோரிக்கைகள் வைக்கப்படும் பொழுதெல்லாம் சிலர் சொல்வதுண்டு, சில நிதி அமைச்சர்கள் பேசி நான் கேட்டதுண்டு. "அரசினுடைய நிதி நிலை பத்தாயிரம் கோடி ரூபாய் என்றால், அதில் ஐயாயிரம் கோடி ரூபாய் அரசு அலுவலர்களுடைய, பணி

யாளர்களுடைய, ஊழியர்களுடைய சம்பளத் திற்கே போய் விடுகிறது என்று ஒன்றைச் சொல்லி, பொதுமக்களுடைய வெறுப்பை அரசு அலுவலர்கள் மீது உருவாக்க எண்ணுகிற விதத்திலே பேசுவார்கள்.

அதைக் கேட்கின்ற பொது மக்களுக்குக் கூட, "ஆமாம் நிதி நிலை அறிக்கையில் பத்தாயிரம் கோடி ரூபாய் அரசின் நிதி நிலை என்கிறார்கள். வரவு செலவுத் திட்டம் படிக்கிறார்கள், அதிலே பாதி ரூபாய் ஐயாயிரம் கோடி ரூபாய்க்கு மேல் இவர்களுக்கே அள்ளிக் கொடுத்துவிட்டால், பிறகு மக்களுக்கான திட்டங்கள் எப்படி நிறைவேறுவது?" என்று பாமரத்தனமாகக் கேட்கிற பெரிய மனிதர்களும் உண்டு. நான் 'பாமரத்தனம்' என்ற கடுமையான வார்த்தையைச் சொல்வதற்குக் காரணமே, அவர்கள் வேண்டுமென்றே பேசுவதில்லை. உண்மையிலேயே புரியாமல் பேசுகிற காரணத்தால் அதைப் பாமரத்தனம் என்று குறிப்பிடுகிறேன்.

பத்தாயிரம் கோடி ரூபாயிலே ஒரு அரசு திட்டங்களை நிறைவேற்ற அறிவிப்புச் செய்தால், அந்தத் திட்டங்களுக்கு முதலமைச்சர் கையெழுத்துப் போட்டதும் மாயா பஜாரிலே வருவதைப் போல அந்தக் கோப்பு தானாக வெளியே போய் அதுவே கல்லூரியைக் கட்டிவிடாது. அந்தக் கோப்பு செல்ல வேண்டிய இடங்களுக்கெல்லாம் சென்று பல்வேறு அலுவலர்கள் அந்தக் கோப்பின் வழி பணிபுரிந்து அந்தக் கோப்பின் வழி ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்பட்டு, அந்தக் கோப்பின் வழி அவர்களின் நியாயமான ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டு, அந்தப் பணிகள் எல்லாம் நிறைவேறிய பிறகு கல்லூரிக்கான பணிகள் நடைபெற்று, அந்தக் கல்லூரிக்கான அடிக்கல் நாட்டப்பட்டு அந்தக் கல்லூரிக்கான சுவர்கள் எழுப்பப் பட்டு, அந்தக் கல்லூரிக்கான விதானங்கள் அமைக்கப்பட்டு, வகுப்பறைகள் வகுக்கப் பட்டு, இத்தனையும் ஒரு கோப்பிலே முதலமைச்சரோ, நிதியமைச்சரோ, கல்வியமைச்சரோ கையெழுத்திட்டு விட்டால் தானாக நிறைவேறுவதில்லை. இவ்வளவையும் செய்வதற்கு இடையிலே இருப்பவர்கள் தான் நீங்கள் என்பதை நான் என்றைக்கும் மறந்துவிடக் கூடியவன் அல்ல.

எனவே ஒரு திட்டத்தை நிறைவேற்ற இத்தனை கோடி ரூபாய் என்று மதிப்பீடு செய்யும்பொழுது, அந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக அரசுப் பணியாளர்கள் இருக் கிறார்கள் என்பதை மறந்துவிட முடியாது. அதை மறந்து விடாத காரணத்தினாலேதான் உங்களுடைய எந்த ஒரு முறையீட்டையும் அலட்சியப்படுத்தாமல் அதனுடைய நியா யத்தை உணர்ந்து, சற்று நிதிநிலை குறுக் கிட்டாலும்கூட அதையும் தவிர்த்து அவை களை நிறைவேற்ற வேண்டும் என்கின்ற மனப்பக்குவம் படைத்தவன்தான் நான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இடையிலே உள்ளாட்சி மன்றத் தேர்தல் வந்து நடந்து முடிந்து அதனுடைய வெற்றிக் களிப்பிலே வெற்றி பெற்றவர்களெல்லாம் இருக்கிற இந்தக் காலக்கட்டத்தில் அதற்காக நானும் மற்றவர்களும் கட்சிரீதியாகவும் அரசு ரீதியாகவும் எடுத்துக்கொள்ள வேண்டிய முயற்சிகள், பணிகள் இவற்றின் காரணமாக இந்த மாநாட்டில் நீங்கள் என்னென்ன கோரிக்கைகள் வைக்கப்போகிறீர்கள், வைத்த கோரிக்கைகள் என்னென்ன, அவைகளைப் பற்றி முன்கூட்டியே அரசு அதிகாரி களிடத்திலே கலந்துபேசி அதற்கான முடி வினை இந்த மாநாட்டில் சொல்லக் கூடிய அளவுக்கு நேரம் இல்லாமல் போய் விட்ட தென்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இருந்தபோதிலும் இதைக் கோரிக்கை மாநாடு என்று நான் கருதாமல் இந்த நான்கைந்து மாத கால ஆட்சிக்கு நீங்கள் தருகின்ற பாராட்டு மாநாடு என்று கருதுகின்றேன். நம்முடைய பிள்ளையை "கடைக்குப் போய் வா" என்று சொன்னால் அது எங்கே போகிறதோ, போகாதோ என்ற சந்தேகத்தில் தாய் "என் கண் அல்ல, ராஜா அல்ல, ரொம்ப நல்ல பிள்ளையாயிற்றே" என்றெல்லாம் ஐந்தாறு முறை கொஞ்சி, குலாவி, போற்றிப் பாராட்டி கடைசியாக

"கொஞ்சம் கடைக்குப் போய் விட்டு வா" என்று சொன்னால் அந்தப் பேச்சிலே பையன் மயங்கிக் கடைக்குப் போய்விட்டு வருவான். ஏனென்றால் நான் சிறுவனாக இருந்தபொழுது என்னுடைய அம்மா என்னை அப்படித்தான் கொஞ்சுவார்கள். எனக்கு இப்பொழுது அம்மா இல்லை. எனவே நீங்களெல்லாம் அம்மாவாக இருந்து மாநாட்டுத் தலைவரும் மற்றவர்களும், நல்லகண்ணு அவர்களும் என்னைப் பாராட்டி, சீராட்டி "மேலும் எங்களுக்காகப் பணியாற்றி எங்களுடைய கோரிக்கைகளை யெல்லாம் நிறைவேற்று" என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

"நீங்கள் வைத்துள்ள இருபத்தி ஐந்து கோரிக்கைகளை நான் ஊன்றிப் படித்திருக்கிறேன். அவைகளெல்லாம் புறக்கணிக்கப்படகூடியவைகள் அல்ல, என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும். மத்திய ஊதியக்குழு விரைவில் தனது அறிக்கையை அளிக்க உள்ளது. அதனுடைய அறிக்கையின்படி மத்திய அரசு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது. அந்த ஊதியக்குழுவின் தலைவர் ஊதியக் குழுவைப்பற்றி சில விவரங்களைத் தெரிந்து கொள்ள கடந்த கால ஆட்சியிலே பலமுறை சென்னையை நாடி வந்தபொழுதும் கூட முதலமைச்சரை சந்திக்க முடியாமல் போன சூழ்நிலைகள் எல்லாம் இருந்தன. ஊதியக்குழுவின் முடிவுகள் எடுக்கப்படுகிற இந்தக் கால கட்டத்திலாவது தமிழக முதல்வராகிய உங்களைச் சந்திக்க இயலுமா என்று என்னைக் கேட்டபொழுது உடனடியாக வரச்சொல்லி அவரோடு நான் பேசியிருக்கின்றேன். அவரிடத்திலே பேசும்பொழுதும் "இந்த மையக் குழுவை மறந்துவிடாமல் ஊதியக் குழுவை, அதனுடைய பரிந்துரைகளை செய்யுங்கள்" என்று நான் கேட்டுக் கொள்கிறேன். எந்த மையக் குழுவை? திட்டம் என்பது வேறு, அரசுப் பணியாளர் என்பது வேறு என்று தனியாகப் பிரித்துப் பார்க்காமல் திட்டத்தோடு இணைந்திருப்பவர்கள்தான் அரசுப் பணியாளர்கள், அவர்கள் இல்லாவிட்டால் திட்டம் இல்லை என்ற அந்த



★ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கொடுமைகள் தடுப்புச் சட்டம் 1989ன் செயலாக்கத்தை ஆய்வு செய்ய, மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் 24 பேர் கொண்ட கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

உணர்வோடுதான் ஊதியக்குழுவின் பரிந்துரைகள் வரவேண்டுமென்று நான் அவர்களிடத்திலே சொல்லியிருக்கிறேன்.

அந்த ஊதியக்குழுவின் பரிந்துரைகள் நல்ல முறையில் வருமென்று நான் கருதுகின்றேன். மத்திய அரசும் அதை நிறைவேற்றும் என்று நம்புகின்றேன். இன்றல்ல, நிதிநிலை அறிக்கையை சட்டமன்றத்தில் நான் படிக்கும்போதே கூறியிருக்கின்றேன். மத்திய ஊதியக் குழுவின் சிபாரிசுகள் மத்திய அரசால் நிறைவேற்றப்படுகிற நேரத்தில் மாநில அரசும் அதைப் பின்பற்றி நடக்கும் என்று நான் குறிப்பிட்டிருக்கின்றேன். நிச்சயமாக அதைப் பின்பற்றி நாம் நடப்போம் என்ற உறுதியை உங்கள் முன்னால் எடுத்து வைக்கின்றேன்.


இங்கு மாநாட்டுத் தலைவர் அவர்களால் பேசப்பட்டு என்னிடத்திலே அச்சிடப்பட்டு கொடுக்கப்பட்டுள்ள அந்தக் கோரிக்கைகள் அனைத்தும் எனக்கு ஒரு குறிப்பேடாகத் தென்படும். அடுத்த நிதிநிலை அறிக்கையைப் படிப்பதற்கு இரண்டு மாதங்கள்தான் இருக்கின்றன. இப்பொழுது படித்து முடித்த நிதிநிலை அறிக்கை ஒரு ஆறுமாத காலத்திற்குத்தான். ஏனென்றால் ஏற்கெனவே இருந்த ஆட்சியாளர்கள் ஒரு நிதிநிலை அறிக்கையைப் படித்துவிட்டு, மே மாதத்தில் ஆட்சிக்கு வந்த நாம் அளித்த நிதிநிலை அறிக்கை இந்த நிதி ஆண்டுக்கு மாத்திரம் தான். எனவே அது முழுமையான

நிதிநிலை அறிக்கை அல்ல. எனவே அடுத்த நிதிநிலை அறிக்கை டிசம்பர் கடைசியிலோ அல்லது ஜனவரியிலோ. ஆளுநர் உரையும் அதைத் தொடர்ந்து நிதிநிலை அறிக்கையும் வைக்கப்பட இருக்கிறது. இந்த இரண்டு மூன்று மாத காலம் பொறுத்துக் கொள்ளுங்கள்.

ஒன்றை உறுதியாகச் சொல்வேன். நிதிநிலை அறிக்கையை நான் தயாரிக்கும் பொழுது எப்போதுமே – நான் நிதியமைச் சராகப்பொறுப்பேற்றிருந்த காலக்கட்டத்தில் 69லும் சரி, அதற்குப் பிறகும் சரி, இப் பொழுதும் சரி, அதிகாரிகளை விட்டு நிதி நிலை அறிக்கைகளை எழுதச் சொல்லி அதனைப் படிப்பவன் அல்ல. நானேதான் நிதிநிலை அறிக்கையை எழுதித் தயாரிப் பேன். புள்ளி விவரங்களில் அதிகாரி களிடத்தில் கலந்து கொள்வேன். வேறு சில பிரச்சினைகளில் அதிகாரிகளிடம் கலந்து கொள்வேன்.

அதிகாரிகளைக் கலந்துகொண்டு நான் தயாரிக்கின்ற நிதிநிலை அறிக்கைக்கு நீங்கள் வைத்துள்ள கோரிக்கைகளையெல்லாம் ஒருமுறை படித்துவிட்டுத்தான் ஒவ்வொரு பக்கம் எழுதும்பொழுதும் இந்த மாநாட்டிலே கலைவாணர் அரங்கத்திலே அரசுப் பணியாளர்களின் நான்காவது மாநாட்டில் என்ன சொன்னீர்கள் என்பதை எடுத்து வைத்துக் கொண்டுதான் நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்படும் என்பதை மாத்திரம் உங்களுக்குத் தெரிவித்து, இதையே என்னுடைய வாக்குறுதியாக நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் இதையே தொலைக் காட்சியும், வானொலியும், பத்திரிகைகளும் வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.



**(சென்னை – கலைவாணர் அரங்கில் 27.10.96 அன்று நடைபெற்ற தமிழக அரசுப் பணியாளர்கள் சங்கத்தின் நான்காவது மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து...)**




**பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாளான 30.10.96 அன்று, அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.**

# தம்பிக்கு...


-எழிற்பித்தன்

திசைகளில் மேலாம் கிழக்கு - தம்பி
தீந்தமிழ் தேனாம் நமக்கு.
விசையது காற்றின் மிடுக்கு - தம்பி
விரிகடல் வானம் முழக்கு!





இசையெனும் தேவை பெருக்கு - தம்பி
இளமையில் கல்வி நமக்கு.
வசையெனில் கேடாம் விலக்கு - என்றும்
வாழ்வினில் அன்பே இருக்கு!



மேவிய ஆசை செருக்கு - தம்பி
மேலும் அதுதான் அழுக்கு.
தேவைகள் ஆயிரம் இருக்கு - நீயும்
தெளிவுற மனத்தைப் பழக்கு!




பாவையர் காதல் கிடக்கு - அது
பருவ நதிகளின் மிடுக்கு.
தாவியே ஓடும் அடக்கு - தம்பி
தன்னிலை விளக்கம் எதற்கு!

ஓவியச் சாலை விழிக்கு - தம்பி
உரைகள் மனம்தான் அதற்கு.
காவிய மேன்மை விளக்கு - என்றும்
காவலாய் இருக்கும் நமக்கு!

திசைகளில் மேலாம் கிழக்கு - தம்பி
தீந்தமிழ் தேனாம் நமக்கு.
விசையது காற்றின் மிடுக்கு - தம்பி
வேர்ப்பலா கவிதை நமக்கு!

"கூட்டுறவு வாரவிழா பண்டித ஜவகர்லால் நேரு அவர்களின் பிறந்த நாளையொட்டி இந்தியா முழுவதும் கொண்டாடப்படுகின்ற விழா. கூட்டுறவில் மிகுந்த நாட்டம் கொண்டவர் ஆசியாவின் ஜோதி பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள். கூட்டுறவில் அவருக்கு அக்கறையும் ஆர்வமும் இருந்த காரணத்தால்தான் இந்திய நாடு கூட்டுறவால் கட்டப்பட்டு இயங்க வேண்டுமென்று அவர் கருதினார். நேரு காலத்தில், அவரால் கூட்டுறவு போற்றப்பட்டது.

எனவேதான், அவருடைய பிறந்த நாளான 14-ஆம் தேதி முதல் ஒரு வார காலம் கூட்டுறவு வாரமாக நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

முதல்நாள் மனித வள மேம்பாட்டு நாளாகவும், இரண்டாம் நாள் கூட்டுறவு மூலம் ஜனநாயகம் மற்றும் சமூகநீதி பாதுகாக்கின்ற நாளாகவும் கொண்டாடுகிறோம்.

அதற்கு அடுத்த நாள் கூட்டுறவு மூலம் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு - வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி நாள்.

அடுத்து, விற்பனை மற்றும் நுகர்வோர் நாள். அடுத்து, கூட்டுறவு மூலம் வேலை வாய்ப்பு மற்றும் தொழில்நுட்ப நாள். அடுத்து மகளிர் மற்றும் நலிவுற்றோர் நாள். இறுதியாகக் கூட்டுறவு மூலம் வீட்டு வசதி நாள்.

இந்த நாட்களில் அடங்கியுள்ள தலைப்புக்களைக் காணும்பொழுதும், அந்தத் தலைப்புகள் பெற்றிருக்கின்ற தகவல்களை நோக்கும் பொழுதும், இவைகளுக்குள்ளேயே ஒரு நாட்டினுடைய வாழ்வு, சமுதாயத்தினுடைய முன்னேற்றம், அந்தச் சமூகத்திற்குக் கிடைக்க வேண்டிய நீதி, சமுதாயத்திலே வலுவாக இருப்பவர்கள், வலுவற்று இருப்பவர்கள், பலமாக இருப்பவர்கள், பலவீனமாக இருப்பவர்கள், இவர்களுக்கு இடையே நடைபெற வேண்டிய சமத்துவம், சமதர்மம் இவை அனைத்தும் இந்தத் தலைப்புகளுக்கிடையே அடங்கி இருக்கின்ற காட்சியை நாம் காண முடிந்தது.

அப்படி ஒரு வாரத்தைக் கொண்டாடி விட்டு, நிறைவு நாளையும் கொண்டாடி விட்டு நாம் கலைந்து செல்கிறோம் என்றால், ஏதோ ஆண்டுக்கு ஒரு வாரம் இதைக் கொண்டாடினோம்; அப்போது மாத்திரம் இதை நினைத்துக் கொண்டோம் என்றில்லாமல், தொடர்ந்து இந்தப் பணிகளில் நாம் நம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

சீமான் எவ்வளவு தவறு செய்தாலும், அது வெளியே வராது. சீமான் போட்டி



# கூட்டுறவே நாட்டுயர்வு

முதல்வர் கலைஞர்

ருக்கிற பட்டுச் சட்டை அதைப் பாதுகாத்து விடும். ஏழை- அவன் ஒரு இயக்கத்திற்கு வந்தால், அது கூட்டுறவு அமைப்பாக இருந்தாலும்சரி, சட்டமன்றமாக இருந்தாலும்சரி- ஏழை தவறே செய்யமாட்டான் என்று சொல்லவில்லை - ஆனாலும் ஏழை செய்தால், அது உடனடியாக அம்பலத்திற்கு வரும். பணக்காரன் செய்தால், அதை மறைப்பதற்கு ஆயிரக்கணக்கான ஆதாரங்கள் அவனிடம் உண்டு.

ஏனென்றால், கறுப்புத் துணியில் ஒரு துளி மையை உதறினால், அது தெரியப்போவதில்லை. தூய்மையான வெள்ளைத் துணியில் ஒரு துளி மை படுமானால், அது பளிச்சென்று தெரியும்.

எனவே, கூட்டுறவுத் துறையில் அங்கம் வகிக்கும் அனைவரையும் நான் தூய்மை யான வெள்ளைத் துணியாகவே கருது கிறேன்; ஒரு துளி மையும் மேலே சிந்தாமல் பார்த்துக் கொள்ளுங்கள். அப்படிப் பார்த்துக்கொண்டால், இந்தச் சமுதாயத்தைச் சிந்தாமல் சிதறாமல் காப்பாற்றினோம் என்ற பெருமை நமக்கெல்லாம் வாய்க்கும்!"

**(21.11.90 அன்று, கூட்டுறவு வார விழாவின் நிறைவு நாள் நிகழ்ச்சியில், சென்னை வள்ளுவர் கோட்டத்தில் ஆற்றிய சொற்பொழிவிலிருந்து)**


## நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் லிமிடெட், நெ.கே.708

செயலிங் ஹவுஸ்
ஸ்தாபிதம் 1935

உதகமண்டலம் 643001
போன்:42339, 43975, 43028

நீலகிரி மாவட்ட வேளாண் பெருமக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக அவர்களின் நண்பனாக தத்துவவாதியாக வழிகாட்டியாக சேவை ஆற்றி வருகிறது.

வேளாண் பெருமக்களின் இடுபொருள் தேவைகள் அனைத்து வகை உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள், விவசாய கருவிகள், தரமான காய்கறி விதைகள் ஒரே கூரையின் கீழ் குறைந்த விலையில் தேவையான நேரத்தில் பெறும் வாய்ப்பு அளிக்கிறது.

நீலகிரி மாவட்டத்தில் 22 சில்லரை விற்பனை நிலையங்கள் செயல்பட்டு அனைத்து வேளாண் இடுபொருள்களும் உரிய நேரத்தில் கிடைக்க வகை செய்கிறது.

உருளைக்கிழங்கு விதை வெளி மாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்து வழங்கி வருகிறது.

தரமான குறுமிளகு கொள்முதல் செய்து நுகர்வோர் கூட்டுறவுகளுக்கு நியாயமான விலையில் வழங்கி வருகிறது.

ஆண்டுக்கு ரூ.10 கோடிக்கு மேல் விளைபொருள் விற்பனையும், ரூ.6 கோடி மதிப்பிற்கு விவசாய இடுபொருள்கள் விற்பனையும் செய்யும் கூட்டுறவு நிறுவனம்.

உருளைக்கிழங்கு, மலைக்காய்கறிகள், தேயிலை உயர் மகசூலுக்கு "என்.சி.எம்.எஸ்." சிறப்பு கலப்பு உரங்கள் உபயோகியுங்கள்.

உருளைக்கிழங்கு, மலைக்காய்கறிகள் விற்பனைக்கு அணுகுங்கள் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம்.

சங்கத்தில் நகைக்கடன் உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது.

உதகமண்டலத்தில் கல்யாண மண்டபம் செயல்பட்டு வருகிறது.

கோத்தகிரியில் கல்யாண மண்டபம் செயல்பட்டு வருகிறது.

1993-94 வியாபார அளவு ரூ.1434.96 இலட்சம்.
1993-94 நிகர லாபம் உத்தேசமாக ரூ.70 இலட்சம்
1994-95 வியாபார அளவு ரூ.1835.91 இலட்சம்
1994-95 நிகர இலாபம் உத்தேசமாக 48 இலட்சம்
1995-96 வியாபார அளவு 2300 இலட்சம்
1995-96 நிகர லாபம் உத்தேசமாக ரூ.90 இலட்சம்

என்.கே.ராமன்,
செயலாளர்

பி.ஜோசி
தனி அலுவலர்



# மாநகராட்சித் தலைவர்களின் பதவியேற்பு நிகழ்ச்சிகள்

**கா**ல் நூற்றாண்டைக் கடந்து நடைபெற்ற சென்னை மாநகராட்சித் தேர்தலில், இத்தனைக் காலமும் இல்லாதபடி பொது வாக்கெடுப்பின் மூலம் வெற்றி பெற்றார், திரு மு.க. ஸ்டாலின் அவர்கள். 16.10.1996ல் முறைப்படி இந்த அறிவிப்பு வெளியிடப் பட்டது. அவர் மாநகராட்சி மேயராகப் பொறுப்பேற்பது குறித்த ஆணையை, மாநகராட்சி ஆணையர் திரு. தேவ. ஜோதி ஜெகராஜன் அவர்கள், திரு மு.க. ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார்.

## விழாச் சிறப்பு

திரு மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னை மேயராகப் பதவியேற்கும் விழா, மாநகராட்சி அலுவலகமான ரிப்பன் மாளிகையில் 25.10.1996 அன்று சிறப்புற நடைபெற்றது. ஈ.வெ.ரா. பெரியார் நெடுஞ்சாலையில் உள்ள ரிப்பன் மாளிகை, இந்த நிகழ்ச்சி யினையொட்டி விழாக்கோலம் பூண்டிருந்தது. வெள்ளம்போல் தமிழர் கூட்டம் வீதியெலாம் நிறைந்திருந்தது. மீண்டும் மக்களாட்சி முறைப்படி உள்ளாட்சித் தேர்தல் நடந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட மேயரையும் உறுப்பினர் களையும் காணும் மகிழ்ச்சியில் மாநகர மக்கள் முகமெலாம் மலர்ந்திருந்தன.

ரிப்பன் மாளிகை மாநகராட்சி மன்றத்தில் நடைபெற்ற இந்த விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களும், தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு ஜி. கருப்பையா மூப்பனார் அவர்களும், ஏனைய கூட்டணிக் கட்சித் தலைவர்களும், மாண்புமிகு இந்நாள் முன்னாள் மாநில அமைச்சர் பெருமக்களும், மாண்புமிகு மத்திய அமைச்சர்களும், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் குடும்பத்தினரும், அரசு தலைமைச் செயலாளர்- உயர் அதிகாரிகள் உட்படப் பல்லாயிரக்கணக்கான பெருமக்களும் கலந்துகொண்டு சிறப்பித் தார்கள்.

சென்னை மாநகராட்சியின் முன்னாள் மேயர்கள், உறுப்பினர்கள், ஏராளமான தாய்மார்கள் ஆகியோரும் உற்சாகத்தோடு அக் கூட்டத்தில் காணப்பட்டனர்.

## மேயர் பதவியேற்பு

மாநகராட்சிக் கட்டடத்தின் முன் உள்ள சர்.பிட்டி தியாகராயர் சிலைக்கு மாலை யணிவித்து விட்டு, திரு மு.க. ஸ்டாலின் அவர்கள் மூன்றாம் தளத்திற்கு வந்தார்.

கருநீல வண்ணக் கோட்டும், சிவப்பு அங்கியும் வெள்ளைப் பேண்ட்டும் மேயர்கள்

அணியும் 101 பவுன் தங்கச் சங்கிலியுமாக மரபுப்படி திரு மு.க. ஸ்டாலின் அவர்கள் தோற்றமளித்தார்.

சென்னைப் பெருநகர முதன்மை நீதிபதி திரு ஏ. இராமமூர்த்தி அவர்கள் அவைக்கு வந்ததும்- தமிழ்த்தாய் வாழ்த்துக்குப்பின், பதவியேற்பு நிகழ்ச்சி பற்றி மாநகராட்சி ஆணையாளர் அறிவித்தார். அதன்பிறகு பதவியேற்பு நிகழ்ச்சி தொடங்கியது.

பெருநகர முதன்மை நீதிபதி அவர்கள் சொல்லச் சொல்ல அப்படியே வணக்கத் திற்குரிய மேயர் அவர்கள் தொடர்ந்து சொல்லி ஏற்றுக்கொண்ட பதவியேற்பு உறுதிமொழி வாசகங்கள் வருமாறு:

"சென்னை மாநகராட்சியின் மேயராகத் தேர்நதெடுக்கப்பட்டுள்ள திரு மு.க. ஸ்டாலின் என்னும் நான், சட்டப்படி நிறுவப்பட்டுள்ள இந்திய அரசியல் அமைப் பில் உண்மையான நம்பிக்கையும், பற்றுறுதி யையும் கொண்டிருப்பேன். நாட்டின் இறையாண்மையையும், ஒருமைப்பாட்டையும் நிலைநிறுத்துவேன். நான் மேற்கொள்ள விருக்கும் கடமையை நேர்மையுடன் நிறை வேற்றுவேன் என்று உளமார உறுதி கூறுகிறேன்".

-இவ்வாறு இருக்கை முன்னுள்ள 'மைக்' மூலம் சொல்லி முடித்தபின் அவ்வாசகங் களோடு கூடிய உறுதிமொழிப் பத்திரத்திலும் அவர் கையெழுத்திட்டார்.

இதன் பின்னர், 'வணக்கத்திற்குரிய மேயர்' அவர்களை, மாநகர முதன்மை நீதிபதி அவர்கள் மேயருக்குரிய இருக்கையில் அமரச் செய்தார்.

**மேயர் கொடி**

மாநகராட்சிக்கென்று தனிப்பட்ட கொடி ஒன்று உண்டு.

புலி, வில், கயல் என்கிற மூவேந்தர்கள் இலச்சினையோடு, பாய்மரக் கப்பலும், மாநகராட்சிக் கட்டடத் தோற்றமும் அந்த, நீலவண்ணக்கொடியில் பொறிக்கப் பட்டிருக்கும்.

மேயர், பதவியேற்றுக் கொண்டதும், மாநகராட்சிக் கட்டடத்தின் மேல் பரந்த தேசியக் கொடிககம்பத்தின் அருகே, மற்றொரு கொடிக் கம்பத்தில் இந்த மாநகராட்சிக் கொடியும் 'மலர்ந்துவிட்டது மக்களாட்சி' என்பதை எல்லோருக்கும் அறிவிக்கும் விதத்தில் ஏற்றிப் பறக்கவிடப் பட்டது.

**அலைமோதிய கூட்டம்**

சென்னை மாநகர மேயராகப் பதவியேற்ற பின், திரு மு.க. ஸ்டாலின் அவர்கள், ரிப்பன் கட்டடத்தின் முன்னே அமைக்கப்பட்டிருந்த மேடைக்கு அழைத்துவரப்பட்டார்.

அந்த உச்சிவெயில் நேரத்திலும் அம் மேடைக்கு எதிரே அலைமோதிய மாபெரும் கூட்டத்தாரிடையே அவர் நன்றி தெரிவிக்கச் சிறியதோர் மேடை அமைக்கப்பட்டிருந்தது.

**நன்றியுரை**

பெருவாரியான வாக்குகள் வித்தியாசத் தில் வெற்றிபெறச் செய்து தன்னைச் சென்னை மேயராகத் தேர்ந்தெடுத்த மாநகர மக்களுக்கு நன்றி தெரிவித்து, வணக்கத்திற் குரிய மாநகராட்சித் தந்தை திரு மு.க. ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:

"28 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு சென்னை மாநகராட்சித் தேர்தல் நடை பெற்று 44வது மேயராக என்னுடைய 44 வயதில் பணியாற்றிடும் வாய்ப்புக் கிடைத் தமைக்கு மகிழ்ச்சி அடைகிறேன்.



**எதிர்ப்பைத் தாங்குவது என்பது எளிதானது அல்ல; அத்தகைய எதிர்ப்பின் நடுவிலும் கடமையைச் செய்வதே பெருமை சேர்ப்பதாகும்.**

**—டாக்டர் எம்.ஜி.ஆர்.**

டாக்டர் ராஜேந்திர பிரசாத், ஜவகர்லால் நேரு, சர்தார் வல்லபாய் பட்டேல் போன்றவர்கள் மேயர் பதவியை அலங்கரித்திருக்கிறார்கள். சென்னை மாநகரத்தில் ராஜா சர். முத்தையா செட்டியார், சத்தியமூர்த்தி, யு. கிருஷ்ணா ராவ், பி.வி. செரியன், டி.செங்கல்வராயன், அ.பொ. அரசு, வி. முனுசாமி, ஜி.குசேலர், சி. சிட்டிபாபு போன்றவர்கள் இடம் பெற்றிருந்த மேயர் வரிசையில் 44வது மேயராக நான் இடம் பெறுவதில் பெருமைப்படுகிறேன்.

இதுவரை மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் வாக்களித்துத்தான் மேயர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போதுதான் முதன்முறையாக மக்களே நேரடியாக வாக்களித்து மேயராகப் பொறுப்பேற்பதில் பூரிப்படைகிறேன்.

மாநகராட்சி உறுப்பினராக அண்ணா போட்டியிட்டதும், தி.மு.க முதன் முதலாக ஆட்சிப்பொறுப்பேற்ற இடம் சென்னை மாநகராட்சி என்பதும் வரலாற்றுச் சிறப்புக்குரியது. சுமார் 40 இலட்சம் மக்கள் தொகை கொண்ட சென்னை மாநகர மக்களின் அடிப்படை வசதிகளைச் செய்ய வேண்டியது மாநகராட்சியின் கடமையாகும்.

நிதி ஆதாரத்தைப் பெருக்க வரிகளை உயர்த்துவது மட்டுமல்ல; உயர்த்தப்பட்டிருக்கின்ற வரிகள் முறையாக, முழுமையாக வசூலிக்கப்பட்டு முறையாகச் செலவிடப்படுகிறதா என்பதைப் பார்க்க வேண்டும். ஒதுக்கப்பட்ட தொகை ஒழுங்காக மேம்பாட்டுத் திட்டங்களுக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறதா என்பதையும் கண்காணிப்பதன் மூலமாகவும் நிதி ஆதாரத்தைப் பெருக்கலாம்.

மாநகராட்சியில் வலிமையான எதிர்க்கட்சி இல்லையென்றாலும்கூட, எங்கள் பணிகள் எந்த வகையில் அமைய வேண்டும் என்று நடுநிலை ஏடுகள் அவ்வப்போது தெரிவிக்கின்ற ஆலோசனைகளை ஏற்று நடப்போம். சென்னையைச் சிங்காரச் சென்னையாக மாற்றுவோம் என்று ஏற்கெனவே மக்களுக்கு வாக்குறுதி அளித்துள்ளோம். அதை நிறைவேற்றுவோம்.



'என் வாழ்க்கையில் பாதியைக் கலை இலக்கியத்திற்காகத் தந்துள்ளேன்; மற்றொரு பாதியை அரசியலுக்காக - சமுதாயத்திற்காகத் தந்துள்ளேன். அதாவது, என்னையே நான், உங்களுக்காகத் தந்துள்ளேன்!'

**-முதல்வர் கலைஞர்**

எந்த ஒரு திட்டத்தையும் செவ்வனே செயல்படுத்த பொதுமக்களின் ஈடுபாடும் ஒத்துழைப்பும் நிரம்பத் தேவை. மாநகராட்சி தீட்டுகின்ற திட்டங்களுக்கு மக்களின் ஆதரவு மிகமிக அவசியம். அதேபோன்று சேவை நிறுவனங்கள், குடியிருப்போர் நலச் சங்கங்கள் நகர முன்னேற்றத்தில் நாட்டம் கொண்ட வணிக நிறுவனங்கள், பொது அமைப்புகள் ஆகிய அனைத்துத் தரப்பு மக்களின் ஆதரவையும், ஆலோசனைகளையும் வழங்கிட வேண்டுகிறேன்.

இதே மாநகராட்சி மன்றத்தில் தவறு நடைபெற்றது என்று தெரிவித்தவுடன் எந்தக் கட்சி ஆளும் பொறுப்பிலே இருக்கிறது என்பதைப் பற்றிக் கவலைப்படாமல், கட்சிப் பாகுபாடின்றி மாநகராட்சி மன்றத்தையே கலைத்து நடவடிக்கை எடுத்தவர் தான் இப்போது தமிழகத்திலே ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிறார் என்பதை நாங்கள் நன்கு அறிவோம்

தவறு நடைபெறுமேயானால், தன் மகன்தானே மேயர் என்று கூடப் பார்க்காமல் நடவடிக்கை எடுக்கக் கூடியவர்தான் என் தந்தை என்பதையும் நான் நன்றாக அறிவேன். காரணம், அவர் திருவாரூரைச் சேர்ந்தவர்.

கன்றின் மீது தேரையேற்றிக் கொன்றவன் தன் மகன்தான் என்பது தெரிந்தும், மகனையே தேர்க்காலில் இட்டுக் கொன்ற மனுநீதிச் சோழன் ஆண்டது திருவாரூரில் தான்.

எனக்கு வாக்களித்த மக்களுக்காக மட்டுமல்லாமல், வாக்களிக்காத மக்களுக்

காகவும் உழைத்து, அவர்கள் நன்மதிப்பையும் பெறுவேன். என்னைத் தேர்ந்தெடுத்த மக்கள் நாம் தவறு செய்துவிட்டோம் என்று வருந்தாத அளவுக்கும், வாக்களிக்காத மக்கள், தவறிவிட்டோமே என்ற வருந்துகிற அளவுக்கும் என் பணிகள் அமையும்.

சென்னை மாநகரத் தந்தை என்று சொல்வதைவிட, இந்த மாநகராட்சியின் முதல் சேவகனாக இருப்பதையே நான் விரும்புகிறேன். வணக்கத்திற்குரிய மேயர் என்று அழைக்கப்படுவதற்குப் பதிலாக, அனைவரையும் வணங்கக்கூடியவன் என்ற வகையிலே செயல்படுவேன் என்று உறுதி கூறுகிறேன்"- இவ்வாறு மேயர் அவர்கள் உரையாற்றினார்.

**துணை மேயர்**

பிறகு, சென்னை மாநகராட்சியின் 155 உறுப்பினர்களும் உறுதிமொழி எடுத்துப் பதவியேற்றுக் கொண்டனர்.

மாலை திருமதி ஜெயசந்திரவதனா துணை மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இத்துடன் மாநகராட்சி மன்றக் கூட்ட நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

**மதுரை மாநகராட்சி**

அக்டோபர் 25 ஆம் தேதியன்று இதே போல மற்ற 5 மாநகராட்சி மேயர்களும், 104 நகராட்சி மன்றத் தலைவர்களும் உறுப்பினர்களும், புதிய அமைப்பான 28 மாவட்டப் பஞ்சாயத்துகளின் தலைவர்களும் உறுப்பினர்களும் 28 மாவட்டங்களிலும் பதவியேற்றார்கள்.

மேலும் 384 ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்களும், துணைத் தலைவர்களும், உறுப்பினர்களும், 634 பேரூராட்சி, 12,584 சிற்றூராட்சி மன்றத் தலைவர்களும் அன்றைய தினமே பொறுப்பேற்றுக் கொண்டனர்.

மதுரை மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயராகத் திரு பி. குழந்தைவேலு தி.மு.க. அவர்கள் பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி திரு வே. இராதாகிருஷ்ணன் அவர்கள் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

மதுரை மாநகராட்சியின் துணை மேயராகத் திரு மிசா பாண்டியன் அவர்கள் பதவியேற்றார். தேர்ந்தெடுக்கப்பட்ட 72 உறுப்பினர்களும் பதவியேற்றார்கள்.

**கோவை**

கோயம்புத்தூர் மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய முதல் மேயராகத் திரு வி. கோபாலகிருஷ்ணன் (த.மா.கா.) அவர்கள் பதவியேற்றார். அவருக்கு, கோயம்புத்தூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி திரு பி. தங்கவேல் அவர்கள் பதவிப் பிரமாணம் செய்துவைத்தார்.

கோவை மாவட்டத் துணை மேயராகத் திரு எம். வேலுசாமி அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பதவியேற்றார். தொடர்ந்து 72 உறுப்பினர்களும் பதவியேற்றனர்.

**திருச்சி மேயர்**

திருச்சிராப்பள்ளியின் வணக்கத்திற்குரிய முதல் மேயராகத் திருமதி புனிதவல்லி பழனியாண்டி த.மா.க. அவர்கள் பதவி யேற்றுக் கொண்டார். அவருக்குத் திருச்சி மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி திரு எஸ். மாரிமுத்து அவர்கள் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

திருச்சி மாவட்டத் துணை மேயராக எமிலி ரிச்சர்டு அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார். தொடர்ந்து வார்டு உறுப்பினர்கள்



**ஒழுக்கம் என்பது நம் இதயங்களின் தூய்மையில் தான் வேரூன்றியிருக்கிறது.**

**—காந்தியடிகள்**



வாழ்க்கையில் நாம் உயர்ந்த பொருட்களைப் பெற வேண்டுமானால், சலியாத உழைப்பும், தளராத ஊக்கமும், விடா முயற்சியும் மிகமிக அவசியமாகும்.

60 பேருக்கும் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**சேலம் மேயர்**

**சே**லம் மாவட்டத்தின் வணக்கத்திற்குரிய முதல் மேயராக டாக்டர் ஜி. சூடாமணி (தி.மு.க.) அவர்கள் பதவியேற்றார். சேலம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி திரு. சடையப்பன் அவர்கள் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

சேலம் மாவட்டத் துணை மேயராகத் திரு. ஜி.கே. சுபாஷ் அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார். அதைத் தொடர்ந்து மாநகராட்சி உறுப்பினர்கள் 60 பேரும் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர்.

**நெல்லை மேயர்**

**தி**ருநெல்வேலி மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய முதல் மேயராகத் திருமதி மு. உமாமகேஸ்வரி (தி.மு.க.) அவர்கள் பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி திரு கு. நடராசன் அவர்கள் பதவிப் பிரமாணம் செய்துவைத்தார்.

திருநெல்வேலி மாநகராட்சியின் துணை மேயராகத் திரு. விசுவநாத பாண்டியன் அவர்கள் பதவியேற்றார். பின்னர் மாநகராட்சி உறுப்பினர்கள், 55 பேர்களும் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்கள்.

உள்ளாட்சி மன்றத் தேர்தல் இவ்வாறு தமிழ்நாடெங்கும் நடைபெற்று மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டோர் அனைவரும் 1996 அக்டோபர் 25ஆம் தேதி அகமகிழ்வோடு பதவியேற்றனர். அமைதியாகவும் எளிமையாகவும் பதவியேற்பு விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

உள்ளாட்சி மன்றத் தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றில் பேசுகையில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்- "கடந்த பொதுத் தேர்தலில் எங்களுக்குக் கிடைந்த வெற்றி சோறு போட்டது போன்றது; உள்ளாட்சித் தேர்தல்களில் பெறவிருக்கும் வெற்றி அதற்குக் குழம்பு ஊற்றுவது போன்றது.." என்று குறிப்பிட்டார்.

தமிழகப் பெருமக்கள் அந்த எதிர் பார்ப்பைப் பரிபூரணமாக நிறைவு செய்து விட்டனர்; உள்ளாட்சி அமைப்புகளைப் பல ஆண்டுகளுக்குப் பிறகு உயிர்த்தெழச் செய்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

**-பி.எல். ராஜேந்திரன்**


தமிழரசு
படிக்க ... பயன்பெற ... பாதுகாக்க

'தமிழரசு' தமிழ்
(மாதம் இருமுறை)
சந்தா விவரம்

ஆண்டுச் சந்தா .... ரூ. 72
அரையாண்டுச் சந்தா ... ரூ. 36
'தமிழரசு' ஆங்கிலம்
(மாதம் ஒருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ. 36
சந்தாத் தொகையை - மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:
உதவி இயக்குநர்
'தமிழரசு'
அரசினர் தோட்டம்,
அண்ணா சாலை
சென்னை - 600 002.

# செய்திச்சரம்

☆ 'டிங்கி' காய்ச்சலால், டில்லியில் மட்டும் ஏறத்தாழ 300 பேர் உயிரிழந்துள்ளனர். 7 ஆயிரத்திற்கும் மேலானோர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். 'ஏடிஸ்ஈஜிப்டை' என்கிற மிக்க குறைந்த தூரமே பறக்க முடிந்த கொசுக்களாலேயே இக் காய்ச்சல் உண்டாகிறதாம். ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், தேசியத் திட்டம் ஒன்றை வகுத்து, மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்து இத்தகைய கொடிய காய்ச்சல் பரவாமல் தடுக்குமாறு மத்திய அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

☆ இந்திய இராணுவத்தின் காலாட்படை தினம் அண்மையில், சென்னை மாநகரில் அனுசரிக்கப்பட்டது. நாட்டின் பாதுகாப்பிற்கெனத் தங்கள் உயிரையே தியாகம் செய்த வீரர்களின் நினைவாகப் போர் நினைவுச் சின்னத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

☆ பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்த்தப்படமாட்டாது என்று, மாண்புமிகு மத்திய பெட்ரோலியத்துறை இணையமைச்சர் திரு. டி.ஆர். பாலு அவர்கள் தெரிவித்திருக்கிறார்.

☆ வடஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள பாலாறு அணை, கடந்த மாதம் நிகழ்ந்த மழை வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுவிட்டது; ரூ.16.38 கோடியில் இந்த அணைக்கட்டு சீரமைக்கப்படவிருக்கிறது.

☆ இரண்டொரு மாதத்தில் மத்திய அரசின் புதிய ஜவுளிக் கொள்கை அறிவிக்கப்படும் என்று மாண்புமிகு மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு. ஆர்.எல். ஜாலப்பா அவர்கள் அறிவித்திருக்கிறார்.

☆ நெய்வேலியில் புதிய நிலக்கரிச் சுரங்கம் அமைக்க அனுமதிக்குமாறு தமிழ்நாடு அரசு விடுத்துள்ள கோரிக்கையை மத்திய அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்று, மாண்புமிகு மத்திய நிலக்கரித்துறை இணையமைச்சர் திரு. காந்திசிங் தெரிவித்திருக்கிறார்.

☆ வெளிநாடுகளில் மனித ஆற்றல் தேவை அதிகரித்து வருவதால், அதற்கென மத்திய மனித ஆற்றல் ஏற்றுமதி மேம்பாட்டுக் குழுமம் அமைக்க மைய அரசு முடிவு செய்திருப்பதாக மாண்புமிகு மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. அருணாசலம் அவர்கள் கூறியுள்ளார்.

☆ இலங்கைக்கு 750 மெட்ரிக் டன் அரிசி வழங்கவிருக்கிறது இந்தியா; முதல் கட்டமாக 20 மெட்ரிக் டன் அரிசி சென்னையிலிருந்து சரக்குக் கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

☆ தமிழகத்தில் புதிதாக 55 கூடுதல் நீதிமன்றங்களை அமைத்திட முதல்வர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு விரைந்து தீர்வு காண்பதற்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக முன்னோடித் திட்டம் ஒன்று அமல்படுத்தப்படுகிறது. தமிழகத்தில் உள்ள 133 மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், 30 மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் மற்றும் 25 மாநகரக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஆக மொத்தம் 394 நீதிமன்றங்களுக்குக் கூடுதலாக ஒரு தட்டச்சர் பதவியிடங்கள் வழங்கப்படும் என்று தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இப்பணியிடங்களுக்கு 788 தட்டச்சுப் பொறிகள் 394 கம்ப்யூட்டர்கள் வழங்கப்படும்.

-அ. மதிமாறன்




# வாழ்வோர் யார்?


-கவிஞர் கா. வேழவேந்தன்



எழுந்தாலும் ‘நெற்கதிர்’போல் எழுதல்
வேண்டும்;
எரிந்தாலும் விளக்கைப்போல்
எரிதல் வேண்டும்;
அழுதாலும் ‘தேனடை’போல் அழுதல்
வேண்டும்;
அசைந்தாலும் ‘தென்ற’லைப்போல்
அசைதல் வேண்டும்;
விழுந்தாலும் ‘விதை’யைப்போல்
விழுதல் வேண்டும்;
விரைந்தாலும் ‘கார்முகில்’போல்
விரைதல் வேண்டும்;
விழுதுவிடும் ஆல்போல நிழலைத் தந்து
வியனுலகில் வாழ்பவரே
என்றும் வாழ்வார்!



கோடிகளை இருப்பறையில்
சேர்த்துச் சென்ற
கொழுத்தவரைப் பழுத்தவரை
நினைத்தோ மாநாம்?
ஆடுகின்ற ஆட்டமெல்லாம்
ஆடிச் செல்லும்
ஆர்ப்பாட்டப் புயற்காற்றைப்
போற்று வோமா?
தேடுகின்ற செல்வத்தைத்
தேகந் தன்னைச்
சீர்மணக்கும் சந்தனம்போல்
தேய்த்தோர் மட்டும்
ஏடுகளில், எழில்நெஞ்சில்
நிலைத்து நின்றார்;
இறந்துமிங்கே வாழ்வாரே
‘வாழ்வார்’ என்பேன்!





# நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி

**தலைமையகம்**

**உதகமண்டலம்**

# ஓர் நற்செய்தி!

நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு அமைக்கப்பட்ட 73 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயப் பெருமக்களுக்கும், விவசாயம் அல்லாத காரியங்களுக்கும் அடியிற்கண்ட கடன்கள் குறைந்த வட்டி விகிதத்தில் வழங்குகிறோம்.

1. குறுகிய காலப்பயிர்க் கடன்கள்
2. நீண்டகால விவசாயக்கடன்கள்
3. கறவை மாடுகள் வாங்க, டிரேக்டர், டில்லர் வாங்கத் தேவையான கடன்கள்
4. நகைக் கடன்கள்

பொதுமக்களுக்கு அவர்களுடைய தகுதி அடிப்படையில் மத்திய வங்கி நேரிடையாக அடியிற்கண்ட கடன்களைக்குறைந்த வட்டியில் வழங்குகிறோம்.

1. லாரி, வேன், கார் போன்ற வாகனங்கள் வாங்க
2. ஆட்டோ ரிக்க்ஷா வாங்க
3. சிறுதொழில் துவங்க
4. நகைக் கடன்கள்

மற்றும் இதர வணிக வங்கிகளைவிட டெபாசிட்டுகளுக்கு அதிக வட்டி தரும் வங்கி நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி


| | |
|---|---|
| 30 நாட்கள் முதல் ஓராண்டு வரை | 12% |
| ஓராண்டும் அதற்கு மேலும் இரண்டு ஆண்டுகள் வரை | 13% |
| இரண்டு ஆண்டும் அதற்கு மேலும் | 14% |

மேலும் விபரங்களுக்குத் தலைமையகத்தையும் எங்கள் 15 கிளைகளையும் அணுகுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வி. மணி
செயலர்

திரு. சற்குரு மகாதேவன்
தனி அலுவலர்

சிறுகதை டாக்டர் மு. வரதராசனார் சிறுகதை டாக்டர் மு. வரதராசனார் சிறுகதை டாக்டர் மு. வரதராசனார்



# குறட்டை ஒலி

நாங்கள் மேல் மாடியில் குடியிருந்தோம். கீழே, வட பகுதியில் ஒரு குடும்பம், தென் பகுதியில் ஒரு குடும்பம் இருந்தன. தென் பகுதியார் வறுமையால் வாடி இளைத்தவர்கள். கணவன், மனைவி, ஆறு குழந்தைகள், ஒரு பாட்டி, ஒரு நாய் என்று பெருகிய குடும்பம் அது. வட பகுதியார் செல்வம் செழித்துக் கொழுத்தவர்கள். திருமணமாகி இருபது ஆண்டுகள் ஆகியும் குழந்தை இல்லாமல் ஏங்குகின்றவர்கள். அவர்களின் கூடத்திலும் அறைகளிலும் நிறையப் படங்கள் உண்டு. ஓர் அலமாரி நிறையக் குழந்தைப் பொம்மைகளும், நாய்ப் பொம்மைகளும் உண்டு. உயிருடன் இயங்கியவர்கள் எலி, எறும்பு முதலியவை தவிர அந்தக் கணவன் மனைவி இருவர்தான்.



... இந்த உலகத்தில் புதியவர் ஒருவர். அறிஞரோ, அரசியல்வாதியோ, தொழிலாளியோ - புதிதாக வந்து சேர்ந்ததாக எண்ணினேன். அவருடைய முதல் குரலைக் கேட்கும் பேறு எனக்குக் கிடைத்ததே என்று மகிழ்ந்தேன்...


ஆனால், அவர்கள் இருந்த பகுதி தூய்மையாக, ஒழுங்காக இருந்தது. பொருள்கள் வைத்தவை வைத்தபடியே இருந்தன. அவர்களின் தும்மல், இருமல், ஏப்பம், கொட்டாவி தவிர வேறு எந்த ஒலியும் கேட்பதில்லை.

தென் பகுதிக் குடும்பமோ ஆரவாரம் மிகுந்தது. குழந்தைகள் எந்நேரமும் ஒன்றை ஒன்று அடித்துக்கொண்டு அமர்க்களம் செய்யும். தாய்க்கும் தந்தைக்கும் குழந்தைகளின் வழக்கைக் கேட்டுத் தண்டிக்கும் வேலை நிறைய இருந்தது. போலீசு நிலையம், நீதி மன்றம், சிறைக் கூடம் எல்லாம் அங்கு இருந்தன. அந்தக் கிழவி எந்நேரமும் சளைக்காமல் இருமிக்கொண்டிருந்தாள். இருமல் ஓய்ந்த நேரத்தில் பாக்கு உலக்கையால் வெற்றிலைப் பாக்கை நறுக்கி, ''லொட் லொட்'' என்று குற்றிக் கொண்டிருந்தாள். அதுவும் ஓய்ந்த நேரத்தில் வருவார் போவார் இடத்தில் மருமகளைப் பற்றி வசை பாடிக்கொண்டிருந்தாள். இடையிடையே கிழவியின் வாழ்க்கைக்கு அமைந்த தாளம் போல், அவர்கள் வளர்க்கும் நாய், தெருவழியே போவாரைப் பார்த்து, உறுமிக்கொண்டும் குலைத்துக் கொண்டும் இருக்கும்.

சில வேளைகளில் மேலே இருந்து நான் எட்டிப் பார்ப்பது உண்டு. அவர்களின் கூடத்தில் கண்ட பொருள்கள் கண்டபடி சிதறிக் கிடக்கும். வட பகுதியாரின் கூடத்தை எட்டிப் பார்க்கலாம் என்றால், பார்ப்பதற்கு அங்கே ஒன்றும் இருக்காது.


இவர்களின் அமர்க்களமும் அலங்கோலமும் அவர்களுக்குப் பிடிப்பதில்லை. எந்தக் குடும்பமாவது வேறு வீட்டில் இடம் பார்த்துக் கொண்டு அகல்வார்களா என்றால், அதுவும் இல்லை. இருசாராரும் மனப்பொருத்தம் இல்லாமல் தனித்தனியே வாழ்ந்து வந்தார்கள். ஆனால் அவர்களால் எங்களுக்கு எந்தக் குறையும் இல்லை. தனியே மேல் மாடியில் இருந்தபடியால், நாடகம் பார்ப்பது போல் கீழே நடந்தவற்றை வேடிக்கையாகக் கவனித்துக்கொண்டு வந்தோம்.

ஏழையின் மனைவி, நிறைந்த கர்ப்பவதியாக இருந்தாள். அவர் வீட்டு நாயும் அப்படித்தான் இருந்தது. ஒருநாள் இரவு அவள் ஏழாவது குழந்தையை ஈன்றெடுத்தாள். அந்தக் குழந்தையின் புத்தம் புதிய குரலை மேலே இருந்த படியே கேட்ட போது, எனக்கு ஒரு புத்துணர்ச்சி உண்டானது. இந்த உலகத்தில் புதியவர் ஒருவர். அறிஞரோ, அரசியல்வாதியோ, தொழிலாளியோ - புதிதாக வந்து சேர்ந்ததாக எண்ணினேன். அவருடைய முதல் குரலைக் கேட்கும் பேறு எனக்குக் கிடைத்ததே என்று



மகிழ்ந்தேன். அடிக்கடி அந்தக் குரலைக் கேட்பதில் விருப்பம் இருந்தது. ஆனால், குழந்தையை ஏன் இப்படி அழவிடுகின்றார்களோ என்ற வருத்தமும் இருந்தது. செல்வரின் மனைவி அதன் குரலைப் பற்றி என்ன எண்ணினாளோ, தெரியவில்லை. நம் வீட்டில் அழத் தெரியாத குழந்தைப் பொம்மை இருக்கிறது. இப்படிப்பட்ட உயிருள்ள குழந்தை இல்லையே என்று ஏங்கிப் பொறாமைப்பட்டாளோ, அல்லது, உள்ள கூச்சல் போதாதென்று இதுவும் வந்து சேர்ந்ததே என்று வெறுப்பு அடைந்தாளோ என்னவோ!

சில நாட்களில் அந்த நாய் ஐந்து குட்டிகளைஈன்றது. மேலே இருந்து ஆவலோடு எட்டிப் பார்த்தேன்.இரண்டு குட்டிகள் வெண்ணிறமாய்ச் சின்ன கரும்பட்டைகளோடு இருந்தன. மற்ற மூன்றும் தாய் போலவே செந்நிறமாய் இருந்தன. அந்த வெள்ளைக் குட்டிகளில் ஒன்றை எடுத்து வளர்க்கலாமா என்ற ஆசை தோன்றியது. இன்னும் கொஞ்சம் வளரட்டும், பிறகு எடுத்து வளர்க்கலாம் என்று அமைதியானேன்.



... தாய்க்கு இல்லாத அன்பா? எங்கேயாவது இருந்தால் எப்போதோ வந்திருக்குமே. முனிசிபாலிட்டியார் பிடித்துக் கொண்டு போயிருப்பார்கள்...

அடுத்த மூன்றாம் நாள் காலையில் வெளியே சென்ற அந்தத் தாய்நாய், நெடு நேரம் ஆகியும் திரும்பி வரவில்லை. அந்த ஐந்து குட்டிகளும் 'கய்ங் கய்ங்' என்று ஓயாமல் கத்திக்கொண்டிருந்தன.

''என்னடியம்மா இந்தக் குட்டியெல்லாம் இப்படிக் கத்துதே, கவனிக்கக்கூடாதா, பாவம்?'' என்றாள் கிழவி.

''அந்த நாய் காலையிலே போனது இன்னும் வரவில்லை அத்தை. பால் இல்லாமல் குட்டி எல்லாம் கத்துது'' என்றாள் மருமகள்.

''ஏதாவது பாலாவது கஞ்சியாவது வார்க்கக் கூடாதா?'' என்றாள் கிழவி.

''பாலுக்கு நாம் எங்கே போவது? கஞ்சி வார்த்தால் செத்துப் போகுமே'' என்றாள் மருமகள்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த என் மனம், ''இப்படியும் உலகம் இருக்க வேண்டுமா?'' என்று வருந்தியது.



... வட பகுதியார் குங்குமப்பூவும் சர்க்கரையும் கலந்து சுண்டக் காய்ச்சின பாலை வயிறாரப் பருகிவிட்டுக் கதவைச் சாத்திக் கொண்டார்கள். தென் பகுதித் தலைவி, குட்டிகளின் அருகே உட்கார்ந்து இரக்கத்தோடு பார்த்து; அவற்றை மெல்லத் தடவிக் கொண்டிருந்தாள்...

பிற்பகலில் குட்டிகளின் 'கய்ங்' ஒலி வரவரப்பெருகியது. பெரிய பிள்ளைகள் இருவருக்கும் சொல்லி, நாயைத் தேடிக்கொண்டு வரும்படி அனுப்பினார் மருமகள். அவர்கள் இங்கும் அங்கும் தேடிவிட்டு 'இல்லை' என்று திரும்பினார்கள். மாலையில் கணவர் வந்தவுடன், ''பெரிய கண்(ண)றாவியாக இருக்கிறது. எங்கேயாவது பார்த்துப் பிடித்துக் கொண்டுவாங்க. இளங்குட்டிகள் இரவெல்லாம் கத்துமே?'' என்றாள் மனைவி. கணவர் தம்சட்டையைக்கழற்றாதபடியே குட்டிகளைப் பார்த்துக்கொண்டு வாசலில் நின்றார். ''தாய்க்கு இல்லாத அன்பா? எங்கேயாவது இருந்தால் எப்போதோ வந்திருக்குமே. முனிசிபாலிட்டியார் பிடித்துக் கொண்டு போயிருப்பார்கள். பொழுதும் போச்சே'' என்று சொல்லிக்கொண்டே வெளியே நடந்தார்.

விளக்கு வைக்கும் நேரத்தில் செல்வர் மனைவி, மேலே வந்தாள். என் மனைவியோடு ஏதோ குறை சொல்லத் தொடங்கினாள். நான் பக்கத்து அறையிலிருந்து கேட்டுக்கொண்டிருந்தேன்.

''லைசென்ஸ் பணம் கட்ட முடியாதவர்கள் நாய் ஏன் வளர்க்க வேண்டும்? நாங்கள் அவர்களோடு பேசுவதே இல்லை. நீங்களாவது கொஞ்சம் சொல்லுங்கள். இரவெல்லாம் தூக்கம் இல்லாமல் போய்விடுமே. எடுத்துத்



தொலைவில் கொண்டுபோய் விட்டுவிட்டால் வழியில் போகின்றவர்கள் ஆளுக்கொன்று எடுத்துக்கொண்டு போய் விடுவார்கள். நீங்கள் வந்து சொல்லிப் பாருங்கள்'' என்றாள்.

அவள் கீழே இறங்கிய சிறிது நேரத்தில், என் மனைவி தென் பகுதியாரிடம் சென்று பேசிக்கொண்டிருந்தாள். திரும்பி வந்ததும், ''என்ன செய்தி?'' என்று கேட்டேன்.

''மூன்று நாய்க் குட்டிகள்; வெளியே விட்டால் செத்துப்போகும். யாராவது எடுத்துக் கொண்டு போனாலும் வளர்க்க முடியாது. இராப்பொழுது எப்படியாவது கழிந்து விட்டால், நாளை முனிசிபாலிட்டிக்குப் பணம் கட்டி, நாயை மீட்டுக்கொண்டு வந்து காப்பாற்றலாம்'' என்றார்களாம்.

''இதை வட பகுதியாரிடம் சொன்னாயா?'' என்றேன்.



... உறக்கம் வரவில்லை. உலகமெல்லாம் நாய்க்குட்டி மயமாக இருப்பதாகத் தோன்றியது. அந்தக் 'க்யங் க்யங்' ஒலி தவிர வேறு ஒன்றும் கேட்கவில்லை...

''சொன்னேன், கதவு, சன்னல் எல்லாவற்றையும் சாத்திவிட்டுக் குட்டிகளின் ஒலி கேட்காதபடி செய்து விட்டுத் தூங்குங்கள் என்று சொன்னேன்'' என்றாள்.

இரவு ஒன்பது மணிக்கு மேல் ஆயிற்று. வீட்டுச் சிறுவர்களின் ஒலியெல்லாம் அடங்கினபடியால் குட்டிகளின் ஒலி, தொடர்ந்துபாட்டுப் போல் கேட்டது.

வட பகுதியார் குங்குமப்பூவும் சர்க்கரையும் கலந்து சுண்டக் காய்ச்சின பாலை வயிறாரப் பருகிவிட்டுக் கதவைச் சாத்திக் கொண்டார்கள். தென் பகுதித் தலைவி, குட்டிகளின் அருகே உட்கார்ந்து இரக்கத்தோடு பார்த்து; அவற்றை மெல்லத் தடவிக் கொண்டிருந்தாள். அவளுடைய கணவர், இளங்குழந்தையைக் கையில் வைத்துக் கொண்டு, இங்கும் அங்கும் நடந்து கொண்டிருந்தார். இளங் குழந்தை அழத் தொடங்கியது. ''குழந்தைக்குப் பால் கொடு'' என்று மனைவியை வற்புறுத்தினார்.

அவள் அரை மனத்துடன் எழுந்து குழந்தையுடன் உள்ளே சென்றாள். பகல் முழுவதும் உழைத்த தொழிலாளி ஆகையால், அவருக்கு மேன்மேலும் கொட்டாவி வந்தது. சிறிது நேரம் நின்று குட்டிகளைப் பார்த்துவிட்டு அவரும் உள்ளே சென்றார்.

இனி எல்லோரும் உறங்கிவிடுவார்கள் என்று எண்ணி நானும் படுக்கச் சென்றேன். ஆனால் உறக்கம் வரவில்லை. உலகமெல்லாம் நாய்க்குட்டி மயமாக இருப்பதாகத் தோன்றியது. அந்தக் 'க்யங் க்யங்' ஒலி தவிர வேறு ஒன்றும் கேட்கவில்லை. ஒரே முறை மட்டும் வட பகுதியார் ஏப்பம் விட்ட ஒலி கேட்டது. காற்று வேண்டும் என்று ஓரிரு சன்னல் திறந்து வைத்திருப்பார்கள் என்று எண்ணினேன்.

குட்டிகளின் ஒலி பொறுக்க முடியாத எல்லைக்குச் சென்றது. திடீரென்று ஒவ்வொரு சுரமாகக் குறைந்து வருவதை உணர்ந்தேன். என்ன காரணமோ, குட்டிகளும் ஒவ்வொன்றாகத் தூங்கத் தொடங்குகின்றனவோ என்று எண்ணினேன். சிறிது நேரத்தில் அவற்றின் ஒலி பாதி அளவிற்குக் குறைந்துவிட்டது. ஏதோ காரணம் இருக்க வேண்டும் என்று எண்ணி, பார்க்கலாம் என்று எழுந்தேன். மேற்கு நடையில் நின்று சாய்ந்து பார்த்தேன். கீழே கிழக்கு நடைப்புறத்தில் சின்ன மண்ணெண்ணெய் விளக்கின் ஒலி தெரிந்தது. அந்த ஏழையின் மனைவி குட்டிகளின் பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள். என்ன செய்கிறாள், பார்க்கலாம் என்று அமைதியாக நின்றேன். நான் நிற்பது தெரியாதபடி ஒரு தூணின் பக்கமாக மறைந்து நின்றேன்.

அவள் இடக்கையில் ஒரு கொட்டாங்கச்சி இருந்தது. அதில் கொஞ்சம் பால் போல் இருந்தது. வலக் கையில் பஞ்சுபோல் ஏதோ வைத்திருந்தாள். அதைக் கொட்டாங்கச்சியில் தோய்த்துத் தோய்த்து ஒவ்வொரு குட்டியின்

வாயிலும் வைத்தாள். குட்டிகள் அதைச் சுவைத்து அமைதியாவதைக் கண்டேன். சிறிது நேரத்தில் முக்கால் பகுதி ஒலி அடங்கிவிட்டது.

ஒரு குட்டி மட்டும் கத்திக்கொண்டே இருந்தது. அவள் கொட்டாங்கச்சியைக் கீழே வைத்துவிட்டாள். வலக்கையில் இருந்த பஞ்சு போன்ற துணியைத் தன் மார்பு அருகே கொண்டு போய் இடக் கையால் அமுத்தித் தன் பாலால் நனைத்து, அந்த ஒரு குட்டியின் வாயில் வைத்தாள். மூன்று முறை அவ்வாறு செய்த பிறகு அதன் ஒலியும் அடங்கியது. குட்டிகள் மூலைக்கு ஒன்றாகப் படுத்துக் கிடந்தன. அந்த இளங்குழந்தையின் தாய், சிறு விளக்கை எடுத்துக்கொண்டு எழுந்து நடந்தாள். விளக் கொளியில் அவளுடைய முகம், மலர்ந்த செந்தாமரையைப் போல், மகிழ்ச்சியோடு விளங்கியதைக் கண்டேன்.

என் படுக்கைக்கு வந்து படுத்தேன். ஏதோ சுமை இறங்கியது போன்ற உணர்ச்சி என் மனத்தில் இருந்தது. பெருமூச்சு விட்டுக் கை கால்களை நீட்டினேன். ஏப்ப ஒலி வந்த அதே திசையிலிருந்து குறட்டை ஒலி வந்து கொண்டிருந்தது. ●

# கள் மயக்கம்

''வயலில் வேலை செய்துகொண்டிருந்த ஒரு குடியானவன் முன் சாத்தான் தோன்றியது. ''மனிதனே! நீ இறக்கும் தருணம் வந்துவிட்டது. உன் இறப்பைத் தவிர்க்க வேண்டுமென்றால் நான் மூன்று உபாயம் சொல்வேன். அதில், ஒன்றை நீ செய்தால் உன் உயிரைஎன்னால் காப்பாற்ற முடியும்'' என்றது. ''சரி'' சொல் என்று தயங்கியபடியே கூறினான் குடியானவன்.

''ஒன்று, நீ உன் வேலைக்காரனைக் கொல்லவேண்டும். இரண்டு உன் மனைவியை அடித்து விரட்டவேண்டும். மூன்று இந்த குவளையிலுள்ள மதுவைக் குடிக்க வேண்டும்.'' சாத்தான் சொல்லி முடித்தது.

குடியானவன் யோசித்தான். என்னுடைய வேலைக்காரன் மிகவும் நல்லவன் விசுவாசம் உள்ளவன். அவனைக் கொல்வது பாவம். அதனால் வேண்டாம். இரண்டாவது, என் மனைவி மிகவும் அன்பானவள். அவளை நான் மிகவும் நேசிக்கிறேன். அவளை அடிப்பது என்பதை நினைத்தே பார்க்க முடியாது. அதனால் அதுவும் வேண்டாம். மூன்றாவதாக மதுவைக் குடிப்பது என்பது தற்காலிகமானதுதான். அதனால் அதைக் குடித்து உயிரைத் தக்கவைத்துக் கொள்ளலாம். என்று அவன் முடிவு செய்தான்.

சாத்தானிடம் ''சரி, மதுக் கிண்ணத்தைக் கொடு'' என்று வாங்கி மடமடவெனக் குடித்தான். போதை தலைக்கேறியது. நிதானம் இழந்தான். மூளை வேலை செய்ய மறுத்தது.

தள்ளாடியபடியே வீட்டுக்கு வந்தான். அவனை வரவேற்ற அவனது மனைவியை அடித்து உதைத்தான். பாத்திரங்களைத் தூக்கி எறிந்தான். தடுத்த தன் மனைவியைக் கொன்றான். பின்னர், வேலைக்காரன் 'அய்யோ! உங்கள் மனைவியைக் கொன்றுவிட்டீர்களே! '' என்று தலையில் அடித்துக் கொண்டு அழுதான்.

''என் மனைவியே போய்விட்டாள் நீ என்னடாஎன்று, வேலைக்காரனையும் அருகே கிடந்த ஆயுதத்தை எடுத்து வெட்டிக் கொன்றான்.

குடியானவனை, குடிகாரனாக மாற்றிவிட்டது அந்தப் பொல்லாத மது எனவே மதுவை எந்தக் கட்டத்திலும் அருந்தவே கூடாது.

**- ஜே. மவுரஸ் எழுதிய, மேக் தி மோஸ்ட் ஆப் யுவர் டைம் என்ற ஆங்கில நூலிலிருந்து.**

# ஹோமியோபதி மருத்துவம்

டாக்டர் எஸ்.பி.கோபிகார்,
டாக்டர் எஸ். முகம்மது அலீம்

இருபது - இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு ஹோமியோபதி மருத்துவம் என்றால் போலி மருத்துவம் என்று தமிழக மக்களால் பரவலாக நம்பப்பட்டு வந்தது. இன்று பட்டி, தொட்டி எல்லாம் பரவி எல்லோராலும் போற்றப்படுகின்ற சிறப்பு மருத்துவமாக இது உருவெடுத்துள்ளது.

1975 ஆம் ஆண்டுக்கு முன்பு தமிழகத்தில் முறையாக ஹோமியோபதி மருத்துவக் கல்வியோ மருத்துவர்களுக்கான சட்டத் திட்டங்களோ கிடையாது. ஆகையால் பாரம்பரிய மருத்துவர்கள் என்ற பெயரில் முறையாக இம்மருத்துவத்தைப்பயிலாத பலரும் மருத்துவம் புரிந்து வந்தனர். அவர்களில் பலர், ஆங்கில மருத்துவம், ஆயுர்வேதா, சித்தா, யுனானி போன்ற இதர மருந்துகளையும் உபயோகித்து வந்தனர். இச்செயலால் ஹோமியோபதி மருத்துவத்தின் தனித்தன்மையை மக்கள் உணரமுடியாமல் இருந்துவந்தது.

அப்பொழுது மக்கள் நல்வாழ்வுத்துறை சுகாதார அமைச்சராக இருந்த மாண்புமிகு அமைச்சர் திரு.க. அன்பழகன் அவர்களின் முயற்சியால் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் தலைமையில் செயல்பட்ட அரசு ஹோமியோபதி மருத்துவர்களுக்கான சட்டத் திட்டங்களை நிர்ணயித்து, தமிழ்நாடு ஹோமியோபதி கவுன்சிலையும், தமிழ்நாடு அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியையும் நிறுவி ஹோமியோபதிக்கென தனிப் பெருமையை அளித்தது.

### கட்டுரையின் ஆசிரியர்

டாக்டர் எஸ்.பி. கோபிகார் ஹோமியோபதி பட்டப்படிப்பில் தங்கப்பதக்கம் பெற்ற இவர், 1937 ஆம் ஆண்டிலிருந்து சென்னையில் ஆயிரக்கணக்கானவர்களுக்கு நோய்களைக் குணப்படுத்திவருகிறார். தமிழ்நாடு ஹோமியோபதி மருத்துவக் கழகத்தின் தலைவராக உள்ளார் இவர் நூற்றுக்கணக்கான மருத்துவ சம்பந்தப்பட்ட ஆலோசனைக் கூட்டங்களில் கலந்துகொண்டும் நூற்றுக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மருத்துவ ஏடுகளில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியுள்ளார். டெல்லியிலிருந்து வெளிவரும் ஹோமியோபதி ஹெரிட்டேஜ் என்ற பத்திரிகைக்கு ஆசிரியராகவும் இருந்து வருகிறார்.

இக்கட்டுரையின் இணையாசிரியரான டாக்டர் எஸ். முகம்மது அலீம் 1983லிருந்து சென்னையில் ஹோமியோபதி மருத்துவம் செய்துவருகிறார். ஹோமியோபதி இன் ப்ராக்டீஸ் என்ற காலாண்டுக்கொருமுறை வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியராக இருக்கிறார். இவர் நூற்றுக்கணக்கான ஆய்வுக்கட்டுரைகளை உள்நாடு மற்றும் வெளிநாட்டின் பத்திரிகைகளில் எழுதியுள்ளார்.

## ஹோமியோபதி என்றால் என்ன?

''முள்ளை முள்ளால் எடுக்கவேண்டும்'' எனும் தமிழ்ப் பழமொழியின் அறிவியல் வடிவம் தான் ஹோமியோபதியின் கோட்பாடு. இம்மருத்துவம் ''ஒத்த மருத்துவம்'' எனத் தமிழ் அறிஞர்களால் அழைக்கப்படுகின்றது. ஹோமியோபதி என்கின்ற சொல் 'ஹோமியோ' (HOMEO) 'பெத்தோஸ்' (PATHOS) என்கின்ற இரண்டு இலத்தீன்

வார்த்தைகளால் உருவானது. 'ஹோமியோ' என்றால் 'ஒரே மாதிரியான' என்றும் 'பெத்தோஸ்' என்றால் 'வேதனை' என்றும் பொருள்படும். ஒரு இயற்கையான நோயைப் போன்று ஒரு செயற்கையான நோயை உருவாக்கும் தன்மை உள்ள ஒரு மருந்தைக் கொடுத்து அந்த நோயைக் குணப்படுத்தும் முறையே ஹோமியோபதி ஆகும்.



டாக்டர் சாமுவேல் ஹானிமேன்

சான்றாக, நாம் வெங்காயத்தை நறுக்கும்போதோ அல்லது பச்சையாக உண்ணும் போதோ, நமது கண்ணில் இருந்தும், மூக்கில் இருந்தும் நீர் வடிகிறது. கண்ணிலும் தொண்டையிலும் ஓர் எரிச்சலும் மூக்கில் ஒரு குறுகுறுப்பும் ஏற்படுகிறது. இத்தகைய குறிகள் 'நீர்க்கோர்வை' (COMMON COLD) எனும் சளித் தொந்தரவில் ஏற்படும். குறிகளை ஒத்திருக்கிறது. வெங்காயத்தால் ஏற்படும் செயற்கையான குறிகளும், நீர்கோர்வையால் ஏற்படும் இயற்கையான குறிகளும் ஒத்து இருப்பதால் வெங்காயத்தை முறையாக வீரியபடுத்தி மருந்தாகக் கொடுக்கும் போது நீர்கோர்வை எனும் நோய் குணப்படுத்தப்படுகிறது.

... ஒரு இயற்கையான
நோயைப்போன்று
ஒரு செயற்கையான நோயை
உருவாக்கும் தன்மை உள்ள ஒரு
மருந்தைக் கொடுத்து அந்த நோயை
குணப்படுத்தும் முறையே
ஹோமியோபதி ஆகும்...

**ஹோமியோபதியின் தோற்றம்**

கி.பி. 18ஆம் நூற்றாண்டில் ஜெர்மனியைச் சேர்ந்த டாக்டர் சாமுவேல் ஹானி மேன் (Dr. Samuel Hahnemann) எனும் ஆங்கில மருத்துவ மேதை மருத்துவம் புரிந்து வந்தார். அக்கால கட்டத்தில் நோய்களைக் குணப்படுத்தும் முறை மிகவும் கொடூரமானதாக இருந்தது. நோயாளிகளுக்கு அட்டைப் பூச்சிகளைவிட்டு இரத்தத்தை உரிஞ்சவைத்தல், இரத்தக் குழாய்களை அறுத்து இரத்தத்தை வெளியேற்றுதல், கந்தகம், பாதரசம், ஊமத்தை போன்ற நச்சுத்தன்மை வாய்ந்த பொருள்களை, வீரியப்படுத்தாமல் (வீரிய படுத்துதல் என்பது நச்சுத் தன்மையைக் குறைக்க ஹோமியோபதி மருத்துவத்தில் பயன்படுத்தப் படும் முறை) அப்படியே மருந்தாகக் கொடுப்பது போன்றவைகளைச்சிகிச்சையாக மருத்துவர்கள் பயன்படுத்தினர்.

டாக்டர் ஹானிமேன் அவர்கள் தன்னிடம் சிகிச்சை பெறும் நோயாளிகள் இத்தகைய மருத்துவ முறையால் நோய் குணமடைவதைவிட, அதிகம் அவதி அடைவதை உணர்ந்து மிகவும் மனம் நொந்து போனார். ஆகவேதான் வைத்தியத் தொழில் புரிவதையே நிறுத்திவிட்டார். அவர் பன்மொழி அறிஞர் ஆதலால் பல வேற்றுமொழி நூல்களை ஜெர்மனிய மொழியிலும், ஆங்கில மொழியிலும் மொழிமாற்றம் செய்து அதன் மூலம் வரும் வருமானத்தைக் கொண்டு தனது குடும்பத்தை நடத்திவந்தார்.

**சிங்கோனா தந்த திருப்பம்**

ஒருமுறை டாக்டர் கல்லன் (Dr. Cullen) எனும் ஆங்கில மருத்துவர் எழுதிய ஒரு புகழ்பெற்ற மருத்துவகுண நூலை மொழிமாற்றம் செய்யும்போது, அந்நூலில் கொடுக்கப்பட்ட ஒரு கருத்து, டாக்டர் ஹானிமேன் அவர்களின் சிந்தனையைத் தூண்டி விட்டது. கொயினா


அவனி போற்றும் ஆறுமாத சாதனைகள்
பிறமொழி பழைய சிறந்த நூல்கள்
திருமண உதவித்தொகை
பத்திரிகையாளர்
ய்வூதியம்
மகப்பேறு உதவித் தொகை
SL

# சொன்னதைச் செய்வோம்! செய்வதைச் சொல்வோம்!

*(1996ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் நாள் முதல், நவம்பர் மாதம் 13ஆம் நாள் வரை)*

மனை வரி ரத்து, நிலுவைத் தொகையும் தள்ளுபடி.

பட்டா பாஸ் புத்தகம் வழங்க ரூ.24 கோடி நிதி ஒதுக்கீடு.

நிர்வாக வசதியின் பொருட்டு, புதிய மாவட்டங்கள் நான்கு உருவாக்கம்.

'சிங்கிள்' டெண்டர் முறை அறவே நீக்கம்.

பருப்பு, மஞ்சள், மிளகாய், புளி, பனங்கற்கண்டு முழு வரிச்சலுகை.

கணிப்பொறி, தொலைக்காட்சிப் பெட்டி, காகிதம், பொறிகடலை சாதாரண பிஸ்கட்டுகள், ஆயத்த ஆடைகள் வரிகுறைப்பு.

சில்லறை விற்பனை விலையை உயர்த்தாமல் அயல்நாட்டு மது உற்பத்தியாளர்களிடம் வசூலிக்கும் வரியை உயர்த்தி அரசுக்குக் கூடுதல் வருவாய் ரூ.65 கோடி.

மொலாசஸ் ஏற்றுமதியில் நடந்த முறைகேடுகள் நீக்கம் - ரூ.10 கோடி.

பலமுனை விற்பனை வரி முறையினை மாற்றி ஒரு முனை விற்பனை வரியாக சீரமைத்தல்.

ரூ.3.17 கோடி நிதி ஒதுக்கீட்டில், வறட்சி நிவாரணப் பணிகள் செயலாக்கம்.

வணிக வரிப் பதிவை ஒவ்வொரு ஆண்டும் புதுப்பித்துக்கொள்வதற்குப் பதில், 5 ஆண்டு காலத்திற்குப் பதிவு செய்துகொள்ள அனுமதி.

பள்ளி இறுதித் தேர்வில் முதல் மூன்று இடம் பெறும் மாணவர்கட்கு மாவட்டந் தோறும் மேற் படிப்பை அரசு ஏற்றல்.

முதல் 10 இடம் பெறும் பட்டதாரிகளற்ற குடும்ப மாணவர்களுக்குக் கல்விச் செலவை ஏற்றல்.

ஆதிதிராவிடர் நலத்திட்டத்தின் கீழ் 40 புதிய ஆதிதிராவிட மாணவ-மாணவியர் நல விடுதிகள் தோற்றுவித்தல்.

பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் இலவச பஸ் பயணம்.

இலங்கைத் தமிழ் மாணவர்கட்கு உயர்கல்வி கற்பதில் தடை நீக்கம்.

21 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும் 99 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 81 உயர்நிலைப் பள்ளிகள்



மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்வு.

85 புதிய தொடக்கப் பள்ளிகள் அமைப்பு.

திராவிடப் பல்கலைக் கழகத்திற்கு நிதியுதவி - ரூ.50 இலட்சம்.

1996-97-ஆம் கல்வி ஆண்டுக்கான பாடநூல்கள் பழைய விலையிலேயே விற்பனை.

ஆசிரியர் பயிற்சி முடித்து, அரசு வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள வர்களில் 11,652 பேருக்கு முன்னுரிமை அடிப்படையில் வேலைவாய்ப்பு அளிக்கப் பட்டுள்ளது.

ரூ.50 இலட்சம் செலவில் ஆசிரியர் பயிற்சித் திட்டம் தொடக்கம்.


உயர்நிலைப் பள்ளிகளில் அடிப்படை வசதிகளைப் பெருக்கிட ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு.

அனைத்து மேநிலைப் பள்ளிகளுக்கும், ஆய்வுக் கூடங்கள் அமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

சென்னையில் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம் தொடங்க நடவடிக்கை.

திருநெல்வேலியில் புதிய சட்டக் கல்லூரி தொடக்கம்.

தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தை முழுமையாகச் செயலாக்க, தலைமைச் செயலகத்திற்கு 500 தமிழ்த் தட்டச்சுப் பொறிகள்.







வழக்கறிஞர்கள் சங்கங்களுக்கு நூலகம் மற்றும் பிற வசதிகளுக்கு ரூ.31 இலட்சத்து 50 ஆயிரம் நிதி வழங்க அரசு ஆணை.

"நல்லாசிரியர் விருது" இனி "டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது" என வழங்க ஆணை.

ஆதிதிராவிட நலத்துறை பள்ளிகளில் ஆய்வகங்கள் அமைத்திட ரூ.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

இரண்டாம் பசுமைப் புரட்சி உருவாக்க வல்லுநர் குழு.

நிலுவைத் தொகையைச் செலுத்திய விவசாயிகளுக்கு மின்கட்டணச் சலுகை.

விவசாயிகள் பயன்பெறும் வகையில், சீரான மின்சாரம் வழங்க ஆணை.

தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு, மானிய விலையில் வேளாண் பொருட்கள் வழங்க ரூ.1.63 கோடி நிதி ஒதுக்கீடு.

கரும்பு விவசாயிகளுக்குச் சேர வேண்டிய நிலுவைத் தொகையை உடனடியாக வழங்க ரூ.26.28 கோடி முன்பணம்.

மருத்துவமனைப் பார்வையாளர் கட்டணம் நீக்கம்.

300 தொடக்கச் சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்ட ரூ.18 கோடி நிதி ஒதுக்கீடு.

'டானிடா' சுகாதாரப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் - தருமபுரி, தஞ்சாவூர், நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டங்களுக்கு ரூ.57.51




கோடி நிதி ஒதுக்கீடு.

- ★ தமிழ் ஆட்சி மொழித் துறைக்குத் தனி அமைச்சகம்.
- ★ மெட்ராஸ் என்பதை 'சென்னை' என்று பெயர் மாற்றம்.
- ★ மொழிக்காவலர், தமிழறிஞர், நலிந்த கலைஞர் உதவித்தொகை உயர்வு ரூ.400 லிருந்து ரூ.500.
- ★ தேவநேயப் பாவாணர் நூல்கள் நாட்டுடைமை. அவரது குடும்பத்திற்கு ரூ.20 இலட்சம் பரிவுத்தொகை.
- ★ பிறமொழி நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்க ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு.
- ★ தமிழ்நாட்டில் செல்லும் புகைவண்டி களுக்குத் தமிழ்ப் பெயர் சூட்ட - தென்னக ரெயில்வே மூலம் அரசு ஏற்பாடு.
- ★ இந்திய மொழிகளிலேயே 'இணையம்' எனப்படும் 'இண்டர்நெட்' மூலமாகத் தமிழில் செய்திப் பரிமாற்றம் செய்ய வசதி.
- ★ கடந்த ஆட்சியினரால் தேர்ந்தெடுக்கப் பட்ட 10,000 காவலர்கள், 600 காவல் துறை உதவி ஆய்வாளர்கள் 1000 தீயணைப்புப் பணியாளர்கள் பணிய மர்த்தல்.
- ★ தமிழ் நாடெங்கும், காவல் துறையின ரால் சமூக விரோதச் செயல்கள் கட்டுப் படுத்தப்பட்டுள்ளது.
- ★ இனக் கலவரங்களிலோ, காவல் துறையினரின் துன்புறுத்தலாலோ, துப்பாக்கிச் சூட்டினாலோ இறந் தவர்கள் குடும்பத்திற்கு ரூ.50,000 நிதியுதவி.
- ★ அறிஞர் அண்ணா பிறந்தநாளையொட்டி 419 சிறைக் கைதிகள் விடுதலை.
- ★ காவல்துறையினர் சீருடை செலவுப் படி ரூ.25லிருந்து ரூ.30ஆக உயர்வு.
- ★ காவல்துறையில் பணிபுரியும் காவலர் களின் தூய பணிக்கு, கீழ்க்கண்டவாறு சிறப்புப் படி அளிக்கப்பட்டுள்ளது. 15 ஆண்டுக்கு ரூ.5, 20 ஆண்டுக்கு ரூ.7.50, 25 ஆண்டுக்கு ரூ.10, 30 ஆண்டுக்கு ரூ.15, 35 ஆண்டுக்கு ரூ.20.
- ★ தமிழ்நாடு காவல்துறை வீட்டுவசதிக் கழகத்தின் மூலம் காவல்துறையினருக்கு வீடு கட்டுவதற்கு, ரூபாய் ஒரு கோடியிலிருந்து மூன்று கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.
- ★ மாநில மனித உரிமைகள் ஆணையம் அமைப்பு.
- ★ விபத்தில் உயிரிழந்தோர் குடும்பத்திற்கு நிதியுதவி அதிகரிப்பு - ரூ.10,000 லிருந்து ரூ.15,000.
- ★ இனக் கலவரங்களில் இறப்பவர் குடும்பத்திற்கு ரூ.50,000.
- ★ தமிழ்நாடு சட்டமன்றத்தில் மீண்டும் மேலவை அமைத்திட, மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற நடவடிக்கை.
- ★ வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஆந்திர மக்கள் துயர் துடைக்க ரூ.1 கோடி நிதி உதவி.



★ பார்வையற்ற பகுதி நேரப் பணியாளர்களுக்கு ரூ.800லிருந்து ரூ.1200 வரை ஊதிய உயர்வு.

★ சென்னை நகருக்குக் கிருஷ்ணா குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

★ உலக வங்கிக் கடன் உதவியில், ரூ.1,140 கோடி மதிப்பீட்டில் நீர்வள ஆதார மேம்பாட்டுத் திட்டம்.

★ திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், வரட்டாறு மற்றும் குப்பத்து ஓடை ஆறுகளின் குறுக்கே ரூ.8.78 கோடி செலவில் நீர்த்தேக்கம் கட்டும் திட்டம் தொடக்கம்.

★ திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் செண்பகத் தோப்பு நீர்த் தேக்கத் திட்டம் ரூ.21.33 கோடி செலவில் தொடக்கம்.

★ நகர்ப்பகுதி சாலைப் மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூ.35 கோடி நிதி ஒதுக்கீடு.


★ ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் கிழக்குக் கடற்கரைச் சாலைத் திட்டத்திற்கு ரூ.20 கோடி நிதி ஒதுக்கீடு.

★ பரம்பிக்குளம் ஆழியாறு - சாத்தனூர் அணை உள்ளிட்ட 12 திட்டங்களின் மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ.47.24 கோடிக்கு அரசு அனுமதி.


★ சென்னை-சைதாப்பேட்டையில் ரூ.6 கோடி செலவில் சுரங்கப்பாதை அமைக்க நடவடிக்கை.

★ நியாயவிலைக் கடை பொருட்கள் குறித்த நேரத்தில் வழங்கல்.

★ நியாய விலைக் கடைகளில், வருமானத்தின் அடிப்படையில் உணவுப் பொருட்கள் எல்லா நாட்களிலும்



85 புதிய பள்ளிகள்




சாலைப் பணிகளுக்கு
35 கோடி ஒதுக்கீடு

பெற்றிடத் தகுந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

★ திருப்பெரும்புதூரில் கொரியா கார் தொழிற்சாலை - ரூ.2,450 கோடி.

★ பொள்ளாச்சியில் தேங்காய் பதனிடும் தொழிற்சாலை - ரூ.399 கோடி.

★ கன்னியாகுமரியில் தேங்காய் உட்பொருள் தொழிற்சாலை - ரூ.18 கோடி.

★ செங்கல்பட்டு அருகே கண்ணாடி தயாரிக்கும் தொழிற்சாலை - ரூ.550 கோடி.

★ மறைமலை நகரில் ஆப்டிகல் பைபர் கேபிள் திட்டம் - ரூ.41.57 கோடி.


★ குத்தகைக் காலத்தை இருபது ஆண்டுகளாக நீடிக்கும் புதிய கனிமக் கொள்கை.

★ ரூ. 500 கோடி முதலீட்டில், கன்னியாகுமரியில் ரப்பர் தொழிற்சாலை.

★ புதிதாகப் பல தொழிற்சாலைகளை உருவாக்கிட, மின் உற்பத்தியைப் பெருக்குவதன் அடிப்படையில், சி.எம்.ஆர். வாசவி தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தம்.

★ தென் கொரியா நிறுவனத்துடன் தமிழ்நாடு அரசு இணைந்து ரூ.350 கோடி முதலீட்டில் புதிய டயர் தொழிற்சாலை அமைப்பு.

★ இராணிப்பேட்டையில் 700 ஏக்கர் நிலப் பரப்பில் தொழிற்பேட்டை விரிவாக்கம்.




சென்னை மாநகராட்சிக்கு ரூ.200 கோடி; மற்ற மாநகராட்சிகளுக்கு ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு.

8500 முன்னாள் கிராம அதிகாரிகளுக்கு ஒய்வூதியம்.

அனைத்து உள்ளாட்சி மன்றங்களுக்கும் குறித்த நாளில் தேர்தல் நடத்தப்பட்டது.

ரூ.77 கோடி செலவில், சென்னை கோயம்பேட்டில் 295 ஏக்கர் நிலப் பரப்பில், ஆசியாவிலேயே சிறப்புமிக்க நவீன காய், கனி, மலர் அங்காடி திறந்து வைக்கப்பட்டது.

மீண்டும் மக்கள் குறை தீர்க்கும் 'மனுநீதித் திட்டம்' செயலாக்கப்பட்டு உள்ளது.

எல்லாக் குடியிருப்புகளிலும், பாது காக்கப்பட்ட குடிநீர் வசதி செய்திடப் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை.

மூன்றே ஆண்டுகளில் 218 ஊராட்சி ஒன்றியங்களில் தொழிற் பயிற்சிப் பள்ளிகள் தொடங்க ஆணை.

ரூ.1,313.20 கோடி செலவில் திருப்பூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயலாக்கம்.

இலவச கான்கிரீட் வீடுகள் திட்டத்திற்கு (இந்திரா குடியிருப்புத் திட்டம்) ரூ.50.81 கோடி கூடுதல் நிதியளிப்பு.

ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களுக்குப் பயன்பட, ஊரக வீட்டு வசதி வாரியம்.

சென்னை-மணலியைச் சுற்றியுள்ள பகுதிகளில் ரூ.26 கோடி செலவில் நீர் ஆதார மேம்பாட்டுத் திட்டம்.

சென்னை மாநகரில் கழிவு நீரகற்றும் பணியை விரிவுபடுத்த ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு; இதில், ரூ.5 கோடி செலவில் ஆதி ஆந்திரக் குடியிருப்புகளுக்குக் கழிவு நீரகற்றும் வசதி.

ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் வழங்கப்பட்டுள்ள ரூ.1 கோடி ரூபாய் மானியத்தில், ரூ.15 இலட்சத்திற்கு மிகாமல் அதன் அலுவலகங்களை அமைத்துக்கொள்ள அனுமதி.

பொள்ளாச்சி அருகே ஏற்றுமதி இறைச்சிக் கூடம் - ரூ.168 கோடி.

புதிதாக 10 கால்நடை மருத்துவ மனைகள் கட்டித் தரல்.

தமிழ்நாடு எரிவாயுத் திட்டம் - ரூ.30 கோடி.


மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி திட்ட உதவித் தொகை அதிகரிப்பு - ரூ.5000 லிருந்து ரூ.10,000.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு மகப்பேறு திட்ட உதவித் தொகை உயர்வு - ரூ.300 லிருந்து ரூ.500.

குடும்பத் தலைவர் இறந்தால் குடும்பத் திற்கான நிதியுதவி உயர்வு - ரூ.5,000 லிருந்து ரூ.7,500.

சத்துணவுத் திட்ட மேம்பாட்டிற்கு ரூ.401 கோடி கூடுதல் நிதி ஒதுக்கீடு.

அரசு மறுவாழ்வு இல்லவாசிகள் மற்றும் அரசினர் ஏழைகள் பராமரிப்பு இல்லவாசிகளுக்கும் அளிக்கப்பட்டு வந்த உணவுக் கட்டணமானது பெரிய



வர்களுக்கு ரூ.7லிருந்து ரூ.15 ஆகவும், சிறியவர்களுக்கு ரூ.5லிருந்து ரூ.10 ஆகவும், உயர்த்தப்பட்டுள்ளது.

திரைப்படத் தொழிலாளர் வேலை நிறுத்தத்திற்குத் தீர்வு.

குறைந்த முதலீடு திரைப்பட மானியம் உயர்வு - ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சம்.

அரசு இடங்களில் படப்பிடிப்புக் கட்டணம் குறைப்பு.

அரசு விழாக்களில் எளிமை; அரசு நிகழ்ச்சிகளில் சிக்கனம்.


பத்திரிகையாளர் ஓய்வூதியம் உயர்வு - ரூ.500 லிருந்து ரூ.1,000.


படப்பிடிப்பின்போது சண்டைக்காட்சிக் கலைஞர்கள் உயிரிழக்க நேர்ந்தால் ஒரு இலட்சம் ரூபாய் உதவித்தொகை; நிரந்தர ஊனமுற்றால் ஐம்பதாயிரம் ரூபாய் உதவித் தொகை; காயமடைந்தால் மருத்துவச் சிகிச்சைக்கான செலவு வழங்கிட அரசு ஆணை.

மக்கள் விருப்பதிற்கிணங்க, ஜெ.ஜெ.டி.சி. நிறுவனம் 'இராஜீவ் காந்தி போக்கு வரத்துக்கழகம்' எனவும்- தரமணி ஜெ.ஜெ. திரைப்பட நகர் 'எம்.ஜி.ஆர். திரைப்பட நகர்' எனவும் பெயர் மாற்றம்.

பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டியக் கட்டபொம்மன் நினைவுக் கோட்டை மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

திரையரங்குகளின் நுழைவுக் கட்டணங்கள், கடைசி வகுப்பு நீங்கலாக




28.10.94க்கு முன் வசூலித்துவந்ததைவிட, 75 சதவிகிதத் திற்கு மிகாமல் மாற்றி அமைத்துக் கொள்ளலாம். அஃதன்னியில் சிறப்பு அனுமதி பெற்றுக் கட்டணங்களை உயர்த்திடவும் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

அர்ச்சகர்கள், கிராமப் பூசாரிகள், உலமாக்கள், ஓதுவார்கள் உதவித் தொகை உயர்வு ரூ.400 லிருந்து ரூ.500.

கங்கைகொண்ட சோழபுரம் கோவில் கலைச்செல்வங்கள் பராமரிப்புக்காக ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

புதிதாக 222 உலமாக்களுக்கு ஒய்வூதியம்.

திருக்கோயில் ஊழியர்களின் ஓய்வூதியம் ரூ.300-லிருந்து ரூ.500 ஆக உயர்வு.

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில் 16 கால் மண்டபத்தைப் புதுப்பிக்க ஏற்கெனவே கொடுத்துள்ள ரூ.15 இலட்சத்துடன் மேலும் ரூ.35 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

அனைத்து சர்க்கரை ஆலைகளிலும் மின் உற்பத்திப் பிரிவுகள்.

தமிழ் நாட்டில், 2000 மெகாவாட் மின் உற்பத்தி செய்ய, 2 ஆண்டுகளில் செயல்படும் 20 சிறிய மின் துணை உற்பத்தி நிலையங்கள் தொடக்கம்.

சிறு துறைமுகங்களைச் சீராக்க 'கடல்சார் வாரியம்'.

கிராமப்புறங்களுக்குத் தனியார் பேருந்துகள் செல்லமுடியாத முறைகேடான சலுகைகள் நீக்கம்.

தொட்டிய நாயக்கர் மற்றும் உட் பிரிவுகளுக்குத் துணை வட்டாட்சி


யர்களே சாதிச் சான்றிதழ் வழங்க ஆணை.

- 69 சதவிகித இட ஒதுக்கீட்டை நிலை நாட்ட உச்சநீதி மன்றத்தில் அயராத முயற்சி.
- பழங்குடியினர் தொழில் தொடங்கிட ஒன்றரைக் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு.
- ஆதிதிராவிட - பழங்குடியினர் - பின் தங்கிய வகுப்பினர் மற்றும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்களை சேர்ந்த அரசு உயர் நிலைப்பள்ளி விடுதி மாணவ மாண வியர் உணவுச் செல வினம் ரூ.138.75 லிருந்து ரூ.180 ஆக உயர்வு.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி யினருக்கு ஒதுக்கப்பட்டு, காலியாக உள்ள 454 காவல் பணிகள் உடனடி யாக நிரப்பப்பட்டது.
- 1.10 இலட்சம் கைத்தறி நெசவாளர் பயன்பெற, சேமிப்பு மற்றும் பாது காப்புத் திட்டத்தில் சலுகை பெறும் வயது வரம்பு 60 ஆக உயர்வு.
- அரசு அலுவலர்கள் குடும்பப் பாது காப்பு நிதியை ரூ.60,000 லிருந்து ஒரு இலட்சமாக அதிகரிப்பு.
- முழு ஒய்வூதியம் பெறத் தேவையான பணிக்காலம் 33 ஆண்டுகளிலிருந்து 30 ஆகக் குறைப்பு.
- அரசு ஊழியர்கள் அகம் மகிழ இடைக்கால நிவாரணம்.
- நாட்டுயர்வு நலப்பணிகள் தொடர்ந்திட கூட்டுறவுத் தேர்தல் நடத்தப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது.
- குடிசை மாற்று வாரிய வீடுகளைச் செப்பனிட ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு.
- குடிசை மாற்று வாரிய வீடுகள், குடியிருப்போர் விரும்பினால், எளிய தவணை முறையில் அவர்களுக்கே நியாயமான விலையில் உரிமையாக்குதல்.
- 442 மீன்பிடிக் கிராமங்களுக்கு, மின்விளக்குடன் கூடிய 20,000 வீடுகள் கட்ட ரூ.6.75 கோடி நிதி ஒதுக்கீடு.
- தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் மூலம் ரூ.120 கோடி செலவில் வர்த்தகப் பொருட் காட்சி மையம்.
- பெரியார் மாவட்டத்தில் ரூ.50 இலட்சம் செலவில் வேளாண்மை தகவல்மையம்.
- சுற்றுச் சூழலைப் பாதுகாக்க ரூ.2.5 கோடி செலவில், 3,130 தொழிற்சாலை களுக்கு 57 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்.
- மாசுக்கட்டுப்பாடு மேம்பாட்டுப் பணி களுக்காகக் கடலூரிலும், தூத்துக் குடியிலும் ரூ.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு.
- மீனவர் காப்புறுதித் திட்டத்தின்கீழ் ரூ.6.56 கோடி நிவாரண உதவி.
- பருவநிலை சாதகமாக இல்லாத மாதங்களில் கடலில் மீன்பிடிக்கச் செல்லமுடியாமல் சிரமத்திற்கு ஆளாகும் மீனவர்களுக்குச் சேமிப்பு நிவாரணத்தின்கீழ் கடல் மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு மாநிலப் பங்காகிய ரூ.6.56 கோடியும் மற்றும் மத்திய அரசு அதன் பங்கை வழங்க முன்வராத நிதியாகிய ரூ.6.56 கோடியையும் சேர்த்து ரூ.13.12 கோடியை வழங்கப்பட்டுள்ளது.
- வால்பாறை மற்றும் நீலகிரியைச் சேர்ந்த 528 தேயிலைத் தோட்டத் தொழிலாளர் களுக்குப் பணி நிரந்தரம்.
- நீதிமன்றங்களுக்கு 394 கூடுதல் தட் டச்சர்கள் நியமனம்.
- தமிழ் நாட்டில், மேலும் 55 கூடுதல் நீதிமன்றங்கள்.
- பூம்புகார் சுற்றுலா வளாக மேம்பாட்டுப் பணிகளுக்கு ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு.
- இந்திய உச்சநீதி மன்றத்தின் பிரிவு ஒன்றைத் தமிழ்நாட்டில் சென்னையில் அமைக்குமாறு மத்திய அரசினை வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது.

(Quinine) மருந்துதயாரிக்கப்பயன்படுத்தப்படும் சிங்கோனா (Cinchona) மருந்தின் பட்டையிலிருந்து எடுக்கப்படும் சாற்றை ஆரோக்கியமான ஒருவர் உட்கொண்டால் அவர் மலேரியா போன்ற தோற்றமளிக்கும் ஒரு விதமான நோய்க்கு ஆளாகலாம் என்பதே டாக்டர்கல்லன் என்பவர் எழுதிய கருத்தாகும்.

... நோயாளிகளுக்கு ஒத்தகுறி உருவாக்கும் மருந்துகளைக் கொடுக்கும் போது ஏற்கெனவே உள்ள இயற்கையான நோயுடன் புது செயற்கை நோயும் சேர்ந்து, நோயின் குறிகளின் தன்மை அதிகமாகி பிறகு குறைகிறது...

டாக்டர் கல்லன் அவர்களின் கருத்து உண்மைதானா என சோதித்து அறிய, டாக்டர் ஹானிமேன் அவர்கள் தானே சிங்கோனா மரப்பட்டையின் சாற்றை உட்கொண்டார். என்ன ஆச்சரியம்! அவர் மலேரிய நோயின் ஒத்த குறிகளால் அவதியுற்றார். தனது சோதனையை மீண்டும், மீண்டும் செய்து பார்த்தார். இச்சோதனையைத் தனது மனைவி, பிள்ளைகள், நெருங்கிய நண்பர்கள் எல்லோரிடமும் நடத்திப்பார்த்தார். விளைவுகள் ஒன்றாகவே இருந்தன. இச்சோதனைகள் மூலம் டாக்டர் ஹானிமேன் அவர்கள் டாக்டர் கல்லன் அவர்களின் எதேச்சையான கருத்தை அறிவியல் பூர்வமாக உறுதிப்படுத்தினார். பின்னர் நூற்றுக் கணக்கான மருத்துவப் பொருட்களைத் தானும் அருந்தி, தன்னைச் சார்ந்தோரையும் அருந்தவைத்து, ஒவ்வொரு மருத்துகளாலும் என்னென்ன குறிகள் உருவாகின்றன' என அறிந்து அவைகளை முறையாகப் பதிவு செய்தார்.



பல்சட்டிலா எனும் இம்மருந்து வயிற்றுக் கோளாறுக்கும் மாதவிடாய் பிரச்சினைகளுக்கும் பொதுவாகப் பயன்படுகிறது.

தனது கண்டுபிடிப்புகளை ''ஆர்கனான் ஆஃப் மெடிசின்'' (Organon of Medicine) எனும் நூல் மூலம் உலகுக்கு வெளிப்படுத்தினார். மீண்டும் தனது மருத்துவத் தொழிலைத் தொடங்கி ஹோமியோபதி கோட்பாட்டைப் பயன்படுத்தி நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்தார். நோயாளிகளுக்கு ஒத்தகுறி உருவாக்கும் மருந்துகளைக் கொடுக்கும்போது ஏற்கெனவே உள்ள இயற்கையான நோயுடன் புது செயற்கை நோயும் சேர்ந்து, நோயின் குறிகளின் தன்மை அதிகமாகி பிறகு குறைவதை அறிந்தார்.

**மருந்து வீரியப் படுத்தல்**

ஆரம்ப காலத்தில் நோயின் தன்மை அதிகரிக்காமல் தடுக்க டாக்டர் ஹானிமேன் அவர்கள் மருந்தை வீரியப்படுத்தும் முறையை (Drug Dynamisation or Potentisation) பயன்படுத்தினார். இம் முறையில் மருந்தை Rectified sprit எனும் சுத்தப்படுத்தப்பட்ட சாராயத்துடனோ அல்லது Lactose எனும் பால் மருந்தை 9 :2 அல்லது 99:1 எனும் விகிதாச்சாரத்தில் கலந்து அக்கலவையை நன்றாகக் குலுக்கியோ அல்லது அரைத்தோ மருந்தை வீரியப்படுத்தி நோயாளிகளுக்குக் கொடுத்தார். இம்மருந்துகளைக் கொடுக்கும் போது ''மெடிசினல் அக்ரவேசன்' (Medicinal Aggravation) எனும் தன்மை குறைந்து நோயாளிகளுக்கு விரைவில் குணம் கிடைத்தது. மருந்துகளை வீரியப்படுத்துவதால் மருந்தின் நச்சுத்தன்மை குறைந்து, நோயைக் குணப்படுத்தும் தன்மை அதிகமாவதை டாக்டர் ஹானிமேன் உணர்ந்தார். மருந்தின் வீரியத்தை அதிகப்படுத்த அதிகப்படுத்த, அதன் நச்சுத் தன்மை மிகவும் குறைந்து நோயாற்றும் தன்மை மேலும் மேலும் அதிகமாவதை அறிந்தார்.

இன்றைய ஹோமியோபதி மருத்துவர்கள் ஓமியோபதி மருந்துகளை 6, 30, 200, 1000, 10000, 50000 போன்ற வீரியங்களில் (Potencys) பயன்படுத்திகிறார்கள். 6வது வீரியம் என்றால் ஆல்ககால் அல்லது லேக்டோஸ் பவுடரில்

மருந்தின் அளவு 1/1000 ஆகும். 200 வது வீரியம் என்றால் 1/100, 200 ஆகும்.

**ஹோமியோபதியின் தனித்தன்மைகள் :**

ஓமியோபதி மருத்துவம் ஒரு நிலையான கோட்பாட்டின் அடிப்படையில் உருவானது. ஆகையால் இம்மருத்துவம் எல்லாக் காலங்களுக்கும் பொருந்தும்.

ஆங்கில மருததுவத் துறையில் மருந்துகளும், அவற்றை உபயோகப்படுத்தும் முறைகளும் காலத்திற்கு ஏற்ப மாறிவருகிறது. புதிய மருந்துகளைக் கண்டுபிடிக்கும்போது பழைய மருந்துகள் (Out dated) பழையன எனத் தூக்கி எறியப் படுகிறது. ஆனால், ஓமியோபதி மருந்துகள் என்றும் நிலைத்து இருக்கின்றன. புதிய மருந்துகள் கண்டுபிடிக்கப்படும் போது பழைய மருந்துகளுடன் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனவே ஒழிய, பழைய மருந்துகள் தூக்கி எரியப்படுவதில்லை.

**குணப் பரிசோதனை**

பெரும்பாலான ஹோமியோபதி மருந்துகளை ஆரோக்கியமான மனிதர்களுக்குக் கொடுத்து, என்னென்ன குறிகள் உருவாகின்றன என அறிந்து, அக்குறிகள் முறையாகப் பதிவு செய்யப்படுகின்றன. மருந்தின் குணங்களை இவ்வாறு அறிவதற்கு மருந்து குணப்பரிசோதனை (Drug proving) எனப் பெயர். இம்முறையில் மருந்துகள் மனிதர்களின் உடல் நிலையிலும், மன நிலையிலும் என்னென்ன மாற்றங்களை உண்டாக்குகின்றன என அறிய முடிகிறது.

ஆங்கில மருந்துகளை விலங்குகளுக்குக் கொடுத்து விலங்குகளின் திசுக்களில் என்ன மாற்றங்களை உண்டாக்குகின்றன என அறிந்து பிறகு மனிதர்களுக்கு மருந்தாகக் கொடுக்கப்படுகின்றது. விலங்குகளின் திசுக்களும் மனிதர்களின் திசுக்களும் ஒரே மாதிரியாக இல்லாததாலும் அவற்றின் எதிர்ப்புச்சக்திகளும் ஒரே மாதிரியாக இல்லாததாலும் இம்மருந்துகள் மனிதர்களுக்குக் கொடிய தீங்குகளை அளிக்கின்றன.



ஆர்னிகா எனும் இம்மருந்து அடிபட்ட காயங்கள் (உட்காயம்) ஆறப் பயன்படுகிறது.

**பக்க விளைவுகள் இல்லை**

வீரியப்படுத்தப்பட்ட ஹோமியோபதி மருந்துகளை உபயோகப்படுத்தும்போது, இம் மருந்துகளுக்கு நச்சுத்தன்மையேதும் இல்லாததால், இம்மருந்துகளுக்குப் பக்க விளைவு ஏதும் கிடையாது. இதர மருத்துவத் துறையில் மருந்துகளைக் கச்சாவாக உபயோகப்படுத்துவதால் பின் விளைவுகள் அதிகம் ஏற்படுகிறது.

ஹோமியோபதி மருந்துகளை நோயுற்றவர்கள் கூறும் குறிகளைக்கொண்டோ அல்லது அவரைச் சார்ந்தோர், நோயாளியைப்பற்றிக் கூறுவதை வைத்தோ நிர்ணயம் செய்ய முடியும். இரத்தம், மலம், நீர் பரிசோதனை கள், எக்ஸ்ரே, ஸ்கேன், என்டோஸ்கோபி போன்ற பரிசோதனைகள் மருந்தை நிர்ணயம் செய்ய அவசியப்படுவதில்லை. ஆனால், இப்பரிசோதனைகள் நோயின் காரணம், தன்மை, பாதிக்கும் வேகம் ஆகியவை அறியவும், நோயை எந்த அளவு குணப்படுத்த முடியுமென ஊகிக்கவும் ஓமியோபதி மருந்துகள் உட்கொண்டபின் எந்த அளவு உடலில் முன்னேற்றம் ஏற்படுகிறது என

... வீரியப்படுத்தப்பட்ட ஹோமியோபதி மருந்துகளை உபயோகப்படுத்தும் போது, இம் மருந்துகளுக்கு நச்சுத்தன்மையேதும் இல்லாததால், இம்மருந்துகளுக்குப் பக்க விளைவு ஏதும் கிடையாது...

அறியவும் உபயோகப்படுகிறது. ஆனால், ஆங்கில மருந்துகளை நோயாளிகள் கூறும் குறியுடன், இரத்தம், மலம், நீர், எக்ஸ்ரே, என் டோஸ் கோப் போன்ற பரிசோதனைகள் மூலம் அறியப்படும் குறிகளையும் கொண்டு, நோய் நிர்ணயம் செய்து பின்தான் கொடுக்க முடியும். நோய் நிர்ணயம் செய்வதில் ஏதேனும் தவறுகள் நிகழ்ந்தால், கொடுக்கப்படும் மருந்து கள் மூலம் மிகக் கொடிய விளைவுகள் ஏற்படலாம்.

... மற்ற மருத்துவத் துறையில் அறுவை சிகிச்சை மூலம்தான் குணப்படுத்த முடியும் என நம்பப்படும் பல நோய்களை நோயாளிகளின் குறிகளைக்கொண்டே சரியான ஹோமியோபதி மருந்துகளைக் கொடுப்பதன் மூலம் குணப்படுத்த முடிகிறது...

**மருந்து ஒவ்வாமை ஏற்படாது**


வீரியப்படுத்தப்பட்ட ஹோமியோ மருந்துகளைக் கொடுக்கும்போது மருந்து ஒவ்வாமை (Drug allergy) ஏற்படுவதில்லை. இதர மருந்துகள் பலவும் ஒவ்வாமையை ஏற்படுத்துகின்றன.

**மருந்து எதிர்ப்பு சக்தி ஏற்படாது**

நாள்பட்ட நோய் (Chronic Diseases) உடையவர்களுக்குப் பல ஆண்டுகள் ஹோமியோபதி சிகிச்சை செய்ய நேரிடும்போது மருந்து எதிர்ப்புச் சக்தி (Drug resistance) உடலில் ஏற்படுவதில்லை. ஆனால், இதர மருந்துகளுக்குப் பெரும்பாலும் உடலில் மருந்து எதிர்ப்புச் சக்தி ஏற்பட்டு மருந்துகள் மேற்கொண்டு பலனளிக்காமல் போய்விடுகிறது.

**விரைவான தீர்வு**

வீரியப்படுத்தப்பட்ட மருந்துகள் அனைத்தும் வாய்மூலம் உட்கொள்ளுவதன் மூலமாகவோ அல்லது மூக்கால் நுகர்வது மூலமாகவோ தக்க பலனை விரைவில் அளிக்கிறது. ஆகவே, ஹோமியோபதியில் ஊசி மருந்துகள் இல்லை.



ரூஸ் எனும் இந்தச் செடியிலிருந்து ரஸ்டாக்ஸ் எனும் மருந்து தயாரிக்கப்படுகிறது. இது பொதுவாக மழைக்காலங்களில் வரும் உடல்வலி, காய்ச்சல் போன்ற நோய்களைப் போக்கும்.

உண்மையான ஹோமியோபதி மருந்துகள் அல்லது ஹோமி யோபதியை முறையாகப் பயன்படுத்துபவர்கள் கண்டிப்பாக ஊசிகளைப் பயன்படுத்த மாட்டார்கள். மேலும் ஹோமியோபதி மருந்து கள் அனைத்தும் இனிப் புச் சுவையுள்ள சிறு மாத்திரைகளாகவோ (Pills) அல்லது தூளாகவோ (Powders) அல்லது சாராய சுவையுள்ள (Alcoholic) சொட்டு மருந்து களாகவோ கொடுக்கப் படுகிறது. ஆகவே, இம் மருந்துகள் அனைத்துத் தரப்பினராலும் குறிப்பாகக் குழந்தைகள் அனைவராலும் விரும்பி உட்கொள்ளப்படுகிறது.

**அறுவைச் சிகிச்சை அறவே இல்லை**

மற்ற மருத்துவத் துறையில் அறுவை சிகிச்சை மூலம்தான் குணப்படுத்த முடியும் என நம்பப்படும் பல நோய்களை நோயாளிகளின் குறிகளைக் கொண்டே சரியான ஹோமியோபதி மருந்துகளைக் கொடுப்பதன் மூலம் குணப்படுத்த முடிகிறது. 'டான்சி லைடிஸ்' (Tonsillitis) என அழைக்கப்படும் ''தொண்டைச் சதை வளர்ச்சி'' நோய், மூலம், பௌத்திரம், சிறுநீரகக்கல், கர்ப்ப பையில் சதை வளர்ச்சி, (Uterine fibroid) சினைப்பையில் நீர்கட்டி (Ovarian Cysts) போன்ற நோய்கள் பெரும்பாலும் ஹோமியோபதி மருந்துகள் மூலம் குணப்படுத்தப்படுகிறது.

**உண்மைச் சம்பவம்**

ஹோமியோபதியின் தனித் தன்மைகளை விளக்கக்கூடிய எங்கள் அனுபவம் ஒன்றை இங்கே கொடுக்கிறோம்.

ஒரு பெண்மணி தன்னுடைய பதினாறு வயதிலிருந்து அடிக்கடி தலைவலியினால் அவதியுற்று வந்தார். பல வலி நிவாரண மருந்துகளை உபயோகித்தும் குணமாகாததால் தன்னுடைய குடும்ப வைத்தியரை சந்தித்துச் சிகிச்சை பெற்றார். ஆனால், பலன் இல்லை. குடும்ப வைத்தியரின் ஆலோசனைப்படி மருத்துவரிடம் சென்று பரிசோதனை செய்து கொண்டார். மிகச் சிறிய அளவில் கிட்டப் பார்வை பாதிக்கப்பட்டதால் தலைவலி வந்திருக்கலாம் என எண்ணி, கண் மருத்துவர் கண்ணாடி அணியும்படி அறிவுறுத்தினார். பல மாதங்கள் கண்ணாடி அணிந்தும், தலைவலி அடிக்கடி வருவதில் எந்த மாற்றமும் இல்லை.

மீண்டும் குடும்ப வைத்தியரின் ஆலோசனைப்படி காது, மூக்கு, தொண்டை நிபுணரிடம் சிகிச்சைக்குச் சென்றார். அவர் இப்பெண்ணின் தலையை எக்ஸ்ரே எடுத்துப் பார்த்து கபால எலும்பில் உள்ள சைனஸ் எனும் பகுதியில் சீழ் கட்டி இருப் பதனால்தான் தலைவலி வந்துள்ளது என நோய் நிர்ணயம் செய்தார். இதனைக் குணப்படுத்த ஊசி மூலம் சைனஸில் (Sinus) உள்ள சீழை வெளியேற்றிவிட்டு சக்தி வாய்ந்த நுண்கிருமிக் கொல்லி மருந்துகள் (Antibiotics) எழுதிக் கொடுத்தார். இம்மருந்துகளைச்சாப்பிட்டபின் கிட்டத்தட்ட எட்டு நாட்களுக்குத் தலைவலி வரவில்லை. ஆனால் அடுத்த நாளே தலைவலி இன்னும் அதிகமான வேகத்துடன் வந்துவிட்டது. அடுத்து ஒரு எக்ஸ்ரே எடுத்துப் பார்த்ததில், 'சைனஸ் சீழ் ஏதும் இல்லாமல் நன்றாக இருந்தது. காது, மூக்கு, தொண்டை நிபுணர் 'சைனஸ் சைடிஸ்' வியாதியைக் குணப் படுத்திவிட்டதாக மகிழ்ச்சியுற்றார். ஆனால், நமது நோயாளியோ தலைவலியால் மேலும் அவதியுற்றார்.

பிறகு மூளையில் ஏதேனும் கோளாறு இருக்கலாம் என எண்ணி நரம்பியல் நிபுணரை அணுகினார். இ.இ.ஜி., ஸ்கேன் போன்ற பரிசோதனைகளால் மூளையில் எந்தப் பாதிப்பும் இல்லை எனத் தெரியவந்தது. அவருடைய சிகிச்சையும் பலனளிக்காததால் இது ஒரு மனநிலை நோய் என்ற முத்திரையுடன் மன நோய் நிபுணரிடம் அனுப்பப்பட்டார். அவர் கொடுத்த மருந்துகளால் இப்பெண்மணி எப்பொழுதும் உறக்கத்தில் ஆழ்ந்து தனது வேலைத்திறன் குறைந்து தனது நாட்களைக் கழிக்கலானார்.

பல ஆண்டுகள் கழித்து ஒரு நண்பரின் ஆலோசனைப்படி ஓமியோபதி மருத்துவம் பெற அவர் எங்களை அணுகினார். அவரின் தலைவலி எந்தச் சூழ்நிலையில் வருகிறது, வலியின் தன்மை என்ன, இதர நோய்க்குறிகள் என்னென்ன உள்ளன என அறிந்து அதற்காக ஒத்த மருந்துகளைக் கொடுத்தோம். ஆறு மாத கால சிகிச்சைக்குப்பின் அவர்குணமடைந்தார். இப்பொழுது ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக எந்த மருந்தும் உட்கொள்ளாமல் பூரண ஆரோக்கியத்துடன் உள்ளார்.

**... உங்களின் பிணியைக் குணப்படுத்தக்கூடிய சக்தி உங்களிடமே உள்ளது. ஆனால், அதனை உங்கள் உடல் சரிவர பயன்படுத்திக் கொள்ளவில்லை...**

ஒரு முறை இப் பெண்மணி எங்களிடம் இந்த வியாதியின் பெயர் என்ன? எப்படி வந்தது? உங்கள் மருந்து எதனைக் குணப்படுத்தி எனது தலைவலியைப் போக்கி யது எனக் கேட்டார். ''உங்களின் பிணியைக் குணப்படுத்தக்கூடியசக்தி உங்களிடமே உள்ளது. ஆனால், அதனை உங்கள் உடல் சரிவர பயன்படுத்திக் கொள்ள வில்லை. உங்களின் நோய்க் குறிகளுக்கு ஒத்த ஹோமியோபதி மருந்தைக் கொடுத்ததன் மூலம் உங்கள் உள்ளே உறங்கிக்கொண்டிருந்த நோய் நீக்கும் சக்தி விழித்துக்கொண்டு உங்கள் தலைவலியைக் குணப்படுத்திவிட்டது,'' எனப் பதிலலித்தோம்.

இதன் மூலம் ஹோமியோபதியின் சிறப்பு அம்சங்கள் பலவற்றை உணர முடியுமென எண்ணுகிறோம்.

## ஹோமியோபதியின் எதிர்காலம்

அண்டைய மாநிலங்களாகிய கேரளம், ஆந்திரம், ஆகிய பகுதிகளில் ஹோமியோபதி

மருத்துவம் நல்ல நிலையில் வளர்ந்துள்ளது. அதுபோலவே, தமிழ்நாட்டில் இம் மருத்துவம் வளர்வதற்கான வாய்ப்புகள் நிறையவே உள்ளன. ஏனெனில், மற்ற மருத்துவ முறைகளைப் போல் அல்லாமல், ஹோமியோபதி மருத்துவம் எளிமையானது. இதில் அறுவை சிகிச்சை முறைகள், ஊசிபோடுதல் போன்றவை வழக்கில் இல்லை. இது, இலகுவானது. ஹோமியோபதி மருந்துகள் எதிர் விளைவோ அல்லது பக்க விளைவோ ஏற்படுத்துவதில்லை என்பதால் நோயாளிகளிடையே இம் மருத்துவம் நல்ல பெயரைப் பெற்று வருகிறது. நோய்களைக் குணப்படுத்துவதிலும் மற்ற மருத்துவ முறைகளைவிடச் சிறந்து விளங்குகிறது. செலவும் குறைவு. எனவே ஹோமியோபதி மருத்துவத்திற்குத் தமிழகத்தில் நல்ல எதிர்காலம் உள்ளது.

## தெரிந்து கொள்ளுங்கள்

ஒரு மாதத்தில் நீங்கள் 39 பாக்கெட் சிகரெட் புகைக்கிறீர்களா? அப்படியானால் ஒரு இரத்த நாளம் விரைவில் அடைப்பட்டுவிடும்; 45 பாக்கெட் புகைக்கிறீர்களா? ஆம் எனில் 2 இரத்த நாளங்கள் கெட்டுவிடும்; 97 பாக்கெட் பிடிக்கிறீர்களா? 3 இரத்த நாளங்களும் கெட்டு, யாரும் காப்பாற்ற முடியாதபடியான மாரடைப்புக்குச் சீக்கிரமே நீங்கள் ஆளாக நேரிடும் என்கிறார்கள் ரஷ்ய மருத்துவர்கள் - எச்சரிக்கை!

மற்ற புகையை நாம் எப்போதாவதுதான் சுவாசிக்க நேரிடுகிறது; ஆனால் அந்தப்புகை சிகரெட் புகைபோல நேரடியாக நம் நுரையீரலையோ, ரத்த நாளங்களையோ சென்று அடைந்து ஆபத்தை உண்டாக்குவதில்லை.

10 சிகரெட் புகைப்பவரின் அருகே ஒருநாள் முழுவதும் இருந்தீர்களானால் போதும்; நீங்கள் புகைக்காமலே இருந்தாலும், 2 சிகரெட் புகைத்த அளவிற்குச் சுவாசத்தால் நீங்கள் பாதிக்கப்படுவீர்கள்.

ஃபில்டர் சிகரெட்டால் ஆபத்தில்லை என்பது தவறு; உதடுகளும் பற்களும் வேண்டுமானால் கறைபடாமல் இருக்குமே தவிர, சாதாரண சிகரெட்டால் ஏற்படும் மற்றெல்லாப் பாதிப்புகளும் உண்டு.

பெண்கள் சிகரெட் பிடித்தால், அவர்கள் பெற்றெடுக்கும் குழந்தைகள் ஊனமுற்றவர்களாகப் பிறப்பார்கள்; புகைக்கும் பெண்களின் கருப்பையும் பெரிதும் பாதிக்கப்படும்.

விடாப்பிடியாக சிகரெட் புகைக்கும் ஆண்களுக்கு, முதுமை வரும் முன்பேமலட்டுத் தன்மை வந்துவிடும் வாய்ப்பு நிறைய இருக்கிறது.

– நேவிஸ்



மாணவர் பக்கம் மாணவர் பக்கம் மாணவர் பக்கம் மாணவர் பக்கம் மாணவர் பக்கம்



# குப்பையிலிருந்து மின்சாரம்?

**வீணாகக் குப்பைத்தோட்டிக்குப் போகும் பழத்தோலிலிருந்து மின்சாரம் தயாரிக்க முடியுமா?**

**சாணத்திலிருந்து எரிவாயு தயாரிப்பது நமக்கெல்லாம் தெரியும். ஆனால் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியுமா?**

**நகரங்களில் உள்ள சாக்கடைக் குழாய்களின் அடைப்பை ஆட்கள் இறங்காமலேயே போக்க முடியுமா?**

முடியும்... முடியும்... எங்களால் முடியும் என்கிறார்கள் நம்மவூர் பள்ளிக்கூட மாணவ, மாணவிகள்.

**கழிவுப்பொருளிலிருந்து மின்சாரம்**
(Bio - Battery)

ஆரஞ்சு, எலுமிச்சை, வாழைப்பழத் தோல்களிலிருந்து, மின்சாரம் தயாரித்துக் கொண்டிருந்த ஜெய்கோபால் கரோடியா இந்து வித்யாலயா மேல் நிலைப்பள்ளியின் 9 ஆம் வகுப்பு மாணவி அபர்ணா பத்மாஷினியை நாம் வியப்புடன் பார்த்தோம்.

பழத்தோல்களைப் போட்டுக் கலக்கி அதிலிருந்து சாற்றை எடுத்து ஒரு குடுவையில் வைத்திருக்கிறார். அதில் இரண்டு செப்புத் தகடுகளைப் பாதியளவுக்கு மூழ்க விட்டுள்ளார். அதன் இரு முனைகளையும் ஒரு வோல்டா மீட்டருடன் இணைக்கும் போது, அதிலிருந்து மின்சாரம் வருவதை ஓல்டா மீட்டரின் முள் அசைவிலிருந்து காணமுடிந்தது.

ஆச்சரியத்தோடு, பார்த்த நம்மிடம், பழத்தோலை சிறிய அளவில் பயன் படுத்திச் செய்வதால் குறைந்த அளவே மின்சாரம் தயாரிக்கமுடிகிறது. இதுவே பெரிய அளவிலும் தயாரிக்கலாம் என்றார்.

''அப்படியென்றால் கொத்தவால் சாவடியில் தினமும் டன்கணக்கில் பழத்தோல்

கிடைக்கிறது, அதைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கலாமா என்றோம்.''

'ஓ' தாராளமாக, கொத்தவால் சாவடியில் வீணாகும், பழக்கழிவுகளிலிருந்தே அங்குள்ள அனைத்து விளக்குகளையும் எரிய வைக்கக் கூடிய அளவுக்கு மின்சாரம் தயாரிக்க முடியும் என்றார்.

**சாணத்திலிருந்து மின்சாரம்**

மாட்டுச் சாணத்தைப் பயன்படுத்தி சாண எரிவாயு தயாரிப்பதை நாம் கண்டிருக்கிறோம். ஆனால், தியாகராய நகரிலுள்ள புனித அகஸ்டின் மெட்ரிகுலேசன் பள்ளி மாணவிகள் புவனா (9ஆம் வகுப்பு), சத்யா (10ஆம் வகுப்பு) ஆகிய இருவரும் சாணத்திலிருந்து மின்சாரத்தைத் தயாரித்துக் காட்டினார்கள்.

நான்கு சிறு பாத்திரங்களில் சாணத்தைக் கரைத்து வைத்து அதிலிருந்து மின்கம்பிகளைச் செருகி மின்சாரம் தயாரிக்கிறார்கள். இதில் 5.4 வோல்ட் மின்சாரம் தயாரிக்க முடியும் என்று செய்து காட்டினார்கள்.

**பாதாளச்சாக்கடை அடைப்பை எடுக்கும் கருவி.**

சென்னை போன்ற பெரிய நகரங்களில் பாதாள சாக்கடைகள் இருக்கின்றன. இவைகளில் எங்காவது அடைத்துக் கொண்டால் அவ்வளவுதான், நகரமே நரகமாகி விடுகின்றது. இந்த அடைப்புக்களைச் சரி செய்ய, மாநகராட்சி ஊழியர்கள் சாக்கடைக் குழாய்களுக்குள் இறங்கிப் பணிபுரிகிறார்கள். அப்படிப்பட்ட சமயங்களில் ஏற்படும் விஷ வாயுக்களால் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு விடுகிறது. எனவே, இதைத் தடுக்க, ஆட்கள் இறங்காமலேயே சாக்கடைக் குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை வேதியியல் பொருட்களைக் கொண்டே போக்கிட முடியும் என்று ஜெய்கோபால் கரோடியா பள்ளி, இந்து வித்யாலயா பள்ளி மாணவிகள் சௌமியா (+2), தேவி (+ 2) மற்றும் அரவிந்த் (+1) ஆகியோர் ஒரு கருவியைச் செய்திருக்கிறார்கள். இந்தக் கருவியைப் பயன்படுத்தி சாக்கடை அடைப்பு களை நீக்கலாம் என்கிறார்கள். செயற்கையாக அங்கே இருந்த கருவியில் ஓர் அடைப்பை ஏற்படுத்தி அதனை நீக்கியும் காட்டினார்கள்.


**நெருப்பு இல்லாமலும் புகையும், தீப்பெட்டி இல்லாமலும் தீ வரும்!**

தீப்பெட்டி இல்லாமல் நெருப்பு உண்டாக்க முடியுமா? முடியுமே என்கிறார்கள்

## கொசுத் தொல்லையா?
## விரட்ட இதோ ஒரு புதுச் செடி!

கொசுத் தொல்லையால் அவதியுற்ற மக்களுக்குக் கொசுவர்த்தி சுருள்கள் மற்றும் கொசு வில்லைகள் போன்றவை வந்தன. இவைகள் பக்கவிளைவுகளை ஏற்படுத்துகின்றன. எனவே, அவற்றை பயன்படுத்த வேண்டாம் என்று மருத்துவர்கள் ஒருபுறம் சிவப்புக் கொடி காட்டுகிறார்கள். கொசுக்கடியே பரவாயில்லை என்று பொதுமக்கள் தவிக்கின்றச் சூழ்நிலையில் எந்தவொரு பக்க விளைவும் இல்லாத ஒரு செடியை அறிவியல் அறிஞர்கள் அண்மையில் கண்டுபிடித்துள்ளார்கள். இச்செடிக்கு 'சிட்ரோஜ' என்று பெயரும் வைத்துள்ளனர்.

இச்செடியை அறைக்குள் வைத்து வளர்த்தால் அதிலிருந்து எலுமிச்சைப் பழ வாசனை வருகிறதாம். இது கொசுக்களை அண்ட விடாமல் விரட்டி விடுமாம். ஆந்திராவில் உள்ள ஒரு நிறுவனம் இதை விற்பனைக்காக இந்தியச் சந்தையில் அறிமுகப்படுத்தப் போகிறது. பார்க்கப்போனால் அறிவியல் உலகம் படிப்படியாக மூலிகைப் பக்கம் நோக்கி போய்க் கொண்டிருப்பதுபோல் தெரிகிறது அல்லவா?



சாணத்திலிருந்து மின்சாரம் தயாரிக்கும் மின்கலம்

சென்னையைச் சேர்ந்த எம்.டபிள்யூ.ஏ. மெட்ரிகுலேசன் மாணவிகள் ஜலீல் பாத்திமா (+2), ஆத்திகா (+ 2), பெனசிர் அப்பாஸ் எனும் மாணவிகள்.

பொட்டாசியம் குளோரைடுடன், அடர் கந்தக அமிலத்தில் ஒரு பங்கு கலந்து ஒரு திரியின் நுனியில் சிறிது சக்கரையைப் போடுகிறார்கள். அவ்வளவுதான் படபட வென்று தீச்சுவாலை உருவாகிறது. நாம் அசந்து போனோம்.

ஈரோடு நவரசம் பள்ளி மாணவர்கள் மனோஜ்பாபு (+2), வினோத் (+2) ஆகியோர் ஒரு கம்ப்யூட்டரில் 48 நாடுகளின் விவரங்களை (பயோ டாட்டாக்களை) பதிவு செய்துவைத் துள்ளார்கள். நாம் எந்த நாட்டைப் பற்றித் தெரிந்து கொள்ள நினைக்கிறோமோ அதற்காக கீ போர்டில் கைவைத்தால் போதும்! அந்த நாட்டின் அனைத்துப் புள்ளிவிவரங்களும் மானிட்டரில் வந்துவிடுகின்றன. இது இந்த மாணவர்கள் தயாரித்துள்ள புரோகிராம் என்கிறார்கள்.

இந்தியாவில் பொருளாதார வளர்ச்சி யைப் படிப்படியாக விளக்கும் காட்சிப் பொருள்கள், அணைகளைப் பற்றிச் சொல்லும் காட்சிப் பொருள்கள், தொலைபேசி, செல்லுலர், பேஜர் இவை எப்படிச் செயல்படுகின்றன என்பதை விளக்கப்படும் காட்சிப் பொருள்கள். சூரிய சக்தியிலிருந்து தானாகவே இயங்கும் தண்ணீர்க் குழாய் இப்படி எத்தனையோ செய்திகளைச் சிறுசிறு காட்சிப் பொருள்கள் மூலம் செய்து காட்டுகிறார்கள்.

**அவ்வையின் நெல்லிக்கனி**

சென்னை பாலலோக் மெட்ரிகுலேசன் பள்ளி மாணவர்கள் ஸ்ரீராம் (+2), ஜெயஸ்ரீ (+2) வசந்த் (+2) ஆகிய மூவரும் எந்தெந்த உணவுப் பண்டங்களில் எவ்வளவு வைட்டமின் சத்து இருக்கின்றன என்று கண்டுபிடித்துச் சொல் கிறார்கள்.

சாதாரண வைட்டமின் மாத்திரைகளை விட எலுமிச்சைசாற்றிலும், நெல்லிக்காயிலும் (வைட்டமின் சி) அஸ்கார்பிக் அமிலம் நிறைய

இருக்கிறது என்கிறார்கள். அதைக் கருவிகள் மூலம் நிரூபித்தும் காட்டுகிறார்கள். மனிதன் தினந்தோறும் ஒரு நெல்லிக்காய் சாப்பிட்டால் போதுமாம். அதில் அவ்வளவு சத்து இருக்கிறதாம். ஔவையார் பெற்ற நெல்லிக்கனியின் மகத்துவம் இப்போதுதான் புரிகிறது. அதுவும் அறிவியல்பூர்வமாக நிருபித்துக்காட்டும் போது நம்பிக்கை இன்னும் கூடுகிறது.

**புரோட்டின் மிகுந்த தண்ணீர்ப் பாசி**

ஸ்பைகி ஸ்பைருலினா என்னும் தண்ணீர்ப் பாசி உணவாகப் பயன்படுகிறது. இதில் 70 சதவிகிதம் புரதச்சத்து மற்றும் வைட்டமின்சத்துக்கள் இருக்கின்றன. அதனால் புரதச் சத்துக்காக எங்கும் தேடி அலைய வேண்டிய தில்லை என்று சொல்கிறார்கள் ஜெய்கோபால் கரோடியா பள்ளி மாணவிகள்.

**எமர்ஜென்சி விளக்கு**

ஜெய்கோபால் கரோடியா இந்து வித்யாலயா பள்ளி மாணவிகள் எமர்ஜென்சி விளக்கைத் தயாரித்துள்ளனர். ரூ. 150 செலவில் இந்த விளக்கைத் தயாரிக்க முடியும் என்பதைச் செய்து காட்டியுள்ளனர். இந்தத் தயாரிப்புக்குத் தேவையான மூலப் பொருள்கள் கேன் (தண்ணீர் கேன்) 6 வோல்ட் பேட்டரி டிரான்சிஸ்டர், கேபாசிட்டர், ஸ்விட்சு, சிவப்பு விளக்கு ஆகியவை இதைக் கொண்டு தயாரிக்கப்படும் எமர்ஜென்சி விளக்கு எடைக் குறைவாகவும் விலை மலிவாகவும் இருக்கிறது.

சென்னை மேற்கு மாம்பலத்தில் ஜெய்கோபால் கரோடியா மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி உள்ளது. இங்கு அக்டோபர் 24,25,26 ஆகிய மூன்று நாட்கள் மாநில அளவிலான கண்காட்சி ஒன்று நடந்தது. தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியிலுள்ள 60 பள்ளிகளிலிருந்து மாணவ, மாணவிகள் கலந்து கொண்டார்கள்.

நிறைவு விழாவில் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. நாஞ்சில் மனோகரன் அவர்கள் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினார். கண்காட்சியின் அமைப்பாளரும் ஜெய்கோபால் கரோடியா இந்து வித்யாலயா மேல்நிலைப்பள்ளி முதல்வருமான திருமதி கிரிஜா சேஷாத்ரி அவர்கள். நம்மிடம் பேசும் போது, 'சென்னை, செங்கல்பட்டு, திருச்சி,



பழந்தோலிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் மின்கலம்

சேலம், ஈரோடு, மதுரை, கன்னியாகுமரி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பள்ளிகள் உயிரியல், வேதியியல், கணிப்பொறி அறிவியல், இயற்பியல், பூகோளம் போன்ற பிரிவுகளில் இக் கண்காட்சியில் கலந்து கொண்டுள்ளன. கண்காட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த பள்ளிகளுக்குச் சுழற்கேடயமும், சுழற்கோப்பையும் வழங்கப்பட்டுள்ளன'' என்றார்.

இந்தியா ஒரு வல்லரசாகும் நாள் தொலைவில் இல்லை. அதை உலகுக்கு உணர்த்தும் நேரம் நெருங்கிவிட்டது என்பதைக் கட்டியம் கூறப் புறப்பட்டு விட்ட இந்த இளம் விஞ்ஞானிகளை எவராலும் பாராட்டாமல் இருக்க முடியாது. ஒரு நூல் கொடுத்தால் போதும், ஆடையாய்க் கையில் கொடுத்து விடும் அறிவும் ஆற்றலும் இவர்களிடையே இருப்பதை நாம் காணமுடிந்தது.

இந்தக் கண்காட்சியைப் பார்க்க பள்ளி மாணவ மாணவிகளும் பெரியவர்களும் நிறைய அளவில் வரிசையில் நின்று பார்த்ததை நம்மால் கவனிக்க முடிந்தது.

இவ்வளவு திறமையுள்ள இந்த விஞ்ஞானத்தளிர்களை முளையிலேயே கருக விட்டுவிடாமல் அவர்களுக்கு உற்சாகமூட்டி நாளைய சமுதாயத்துக்கு நல்வழிகாட்டப் பயன்படுத்திட வேண்டும் என்கிற உணர்வுகளோடு வெளியே வந்தோம்.

**– கேட்டி. புகழேந்தி**
**எம்.வி.எம். அசோகன்**

# நிலமடந்தை

முனைவர் சிலம்பொலி செல்லப்பன்

'செய்' என்பது நிலம். செய்யில் இட்ட வித்து முளைக்க நீர் இன்றியமையாதது; செழித்து வளரக் காற்றும், சூரிய ஒளியும் தேவை. நல்ல வித்தாயினும், பாறைமேல் இட்டால் பயிர் முளைக்குமா? சிறந்த நிலமாயினும் சொத்தை வித்தினை வித்தினால் பலனேது? பண்பட்ட நிலத்தில் பொறுக்கு விதைகளையிட்டாலும், நீரில்லா விட்டால் அவை முளைக்கமாட்டா. முளைத்த பயிருக்குச் சூரிய ஒளி இல்லை யேல், அது வெளுத்து நாளடைவில் அழிந்துவிடும். அனைத்தும் பொருந்திய நிலையில் முளைக்கும் பயிரே செழித்து வளர்ந்து சிறந்த பயனை நல்கும்.

வள்ளுவரின் பண்பட்ட உள்ளமாகிய நிலத்தில் வதிந்த கருத்து வித்துக்கள் அவருடைய பட்டறிவாகிய நீர் பட்டமையால், குறட்பயிர்களாக முளைத்தன. அவருடைய புலமை ஒளிபெற்று, அக் குறட்பயிர்கள் உரத்துடன் வளர்ந்து உலகுக்கு நலம் விளைத்தன. வள்ளுவரின் உள்ளச் செய்யில் தோன்றி வளர்ந்த குறள், உலகச் செய் கொண்டு விளக்கும் கருத்துக்களை இனிக் காணலாம்.

ஒரு பாத்தியில் பயிர்கள் வளர்ந்து வருகின்றன. நீர் பாய்ந்து, களையெடுத்துக் கொத்திவிட்டமையால் நிலம் புழுதி படிந்த நிலையில் இருக்கிறது. அடுத்து நீர் பாய்ச்சப்படுவதை எதிர்பார்த்துள்ள நேரம், அந்நிலையில் நீர் பாய்ந்தால் பயிரின் வளர்ச்சி மகிழ்வூட்டக் கூடியதாய் இருக்கும். தேவைக்கு மேல் நீர் பாய்ந்து சதுப்புற்ற நிலத்தில் மேலும் நீரைப் பாய்ச்சினால் பயிர் அழுகிக் கெடும் அளவுக்கு மிஞ்சி, நிலம் வறண்டுபோனாலும் பயிர் கருகிவிடும். எதிர்நோக்கி நிற்கும் தருணத்தில் பாய்ச்சப் படும் நீர்தான் வளர்ச்சிக்கு உதவும். அவை அறிந்து பேச வேண்டிய இன்றிய மையாமையை வலியுறுத்த வள்ளுவர் வளரும் பயிருக்கு நீர் பாய்ச்சும் நிலையைச் சுட்டிக்காட்டுகிறார்.

பேசுவோர் அவையின் தன்மையை அறிந்து, ஏற்ற சொற்களை ஆராய்ந்து சொல்லவேண்டும். அவையறியாது பேசுவோரின் பேச்சு, பேசியும் பேசப்படாத தேயாகும். அறிவிற் சிறந்தவர்முன் பேசுவோர், தாமும் அறிவிற் சிறந்தோராய்ப் பேச வேண்டும். அறிவில் இளையார்முன் பேசும்போதோ, தாமும் அந்நிலை நின்றே பேசவேண்டும். அவர்கட்குப் புரியாத உயர்ந்த கருத்துக்களை அங்கு பேசுவதால் பயன் ஏதுமில்லை. தாமே உணர்ந்து கொள்ளும் தன்மையுடையவர்முன் கற்றவர் பேசுதல், வளரும் பயிர் உள்ள பாத்தியில் உரிய வேளையில் நீரைச் சொரிந்தது போலாகும். நீரை எதிர்பார்த்திருந்த பயிருக்கு நீர் கிடைக்கிறது; சேர்ந்த நீரும் பயிர் வளரப் பயன்படுகிறது.

"உயர்வ துடையார்முன் சொல்லல்
வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந் தற்று"

மக்களில் தீயவர்கள், கயவர்கள் இருப்பார்கள். கழுத்திலிருக்கும் நகைக்காகக் குழந்தையைக் கொல்லும் கயமைத்தனம் நிறைந்தோரும் மனித வடிவில் உலவு வதுண்டு. அத்தகையோரிடம் இரக்கம் காட்டித் தண்டிக்காது விட்டுவிட்டால்



சமுதாயம் பாழ்பட்டுவிடும். வயலில் பசுமையான பயிரினூடே முளைக்கும் களையும், பயிரைப் போலவே பசுமையாகவும் செழிப்பாகவும் தோற்றமளிக்கும். பசுமைத் தோற்றத்தால் பயிரைப் போன்று இருக்கும் தன்மை கொண்டு- களையைக் களையாது விட்டுவிட்டால், அது வளரத் தொடங்கி, நாளடைவில் பயிரையே நசுக்கிவிடும்.

பயிருக்கிடையே காணப்படும் களையை அகற்றுவதுபோலச் சமுதாயத்தில் தோன்றும் கொடியவர்களைக் களைய வேண்டியது நல்லாட்சியின் அவசியச் செயலாகும்.

**"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்**
**களைகட் டதனோடு நேர்"**

கொடியவர் சிலரைக் கொலைத் தண்டனையால் அரசன் ஒறுத்தல் பயிரைக் காப்பாற்ற களையைக் களைவதற்கு நிகரான செயலாகும் என்பது இதன் பொருள்.

வள்ளுவர், மக்களிடையே குலம் பிரிக்கிறார்: உயர்ந்த குலம் என்றும் தாழ்ந்த குலம் என்றும் பேதப்படுத்துகிறார். உலக ஒருமைப்பாடு பற்றிப் பேசிய அவ்வொப்பில், புலவன் குலப் பாகுபாடு பற்றிக் கூறியிருப்பானா என்ற ஐயம் உடனே அனைவர்க்கும் தோன்றும்.

**"சாதிகள் இல்லையடி பாப்பா- குலந்**
**தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்"**

- என்றார் பாரதியார்.

வள்ளுவர் பிரிக்கும் குலம் இச்சாதி சமயத்தை அடிப்படையாகக் கொண்டது அல்ல! "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று முழங்கிய முதற் புரட்சியாளர் அவர்.

**"சாதியிரண்டொழிய வேறில்லை......"**

**"இட்டார் பெரியோர்; இடாதோர் இழி**
**குலத்தோர்"**

-என்றாள் அறநெறி கூறிய ஔவைப் பாட்டி. கொடையாளர் உயர் சாதியினர்; இடமுடிந்தும் இட இடந்தரா உள்ளமுடையோர் இழி சாதியினர்; இஃது ஔவையின் கருத்து. குலத்தைப் பிரிக்க ஔவை கொண்ட அளவுகோல் கொடைத் தன்மை; இதற்கு வள்ளுவர் கொள்ளும் அளவுகோலோ நமக்கு வியப்பூட்டுவதாக உள்ளது!

அவர் நாவலர் அல்லவா? எனவே ஒருவனுடைய நாக்கைக் கொண்டே இனம் பிரிக்கிறார். எவ்வாறு? எந்த நாக்கு உயர்ந்த, சீரிய அறிவு நலம் சான்ற சொற்களை வெளிப்படுத்துகின்றதோ, அந்நாவுக்குரியவன் உயர் குலத்தவன், கீழ்த் தரமான, முறையற்ற கேடான, கயமைத் தன்மை நிறைந்த சொற்களை எவனுடைய நா பேசுகிறதோ, அவன் கீழ்க் குலத்தவன். இது வள்ளுவர் கருத்து.

**"நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்**
**குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்."**

முளைத்து வரும் வித்து, நிலத்தின் தன்மையை - அது சத்துள்ள நிலமா, சத்தற்ற நிலமா என்ற கூறுபாட்டைக் காட்டும். அதேபோல், ஒருவனுடைய வாயிலிருந்து பிறக்கும் சொல் அவனுடைய குடியைக் காட்டும். இதன் பொருள் என்ன? செம்மையான சொற்களைக் கூறுவோர் உயர்ந்த குடியினர். நலம் பயக்காத மொழி பேசுவோர் தாழ்ந்த குடியினர் என்பதேயாம்.

சொற்களைக் கூறவேண்டிய முறையைப் பற்றித் தெய்வப் புலவர் வலியுறுத்திக் கூறியுள்ள கருத்து ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டிய ஒன்று. நம் வாயிலிருந்து

பிறக்கும் சொல் தரும் பொருள் என்ன, அவ்வாறு பேசுவது முறைதானா, நம்முடைய பண்பாட்டுக்கு அது ஏற்றதா, என்பன போன்றவற்றைச் சிந்தியாமலேயே பல வேலைகளில் நாம் பேசிவிடுகிறோம்.

திரைப்பட விளம்பரங்களிலும், பத்திரிக் கைகளிலும், "ரசிகர்களின் கனவுலகக் கன்னி... நடிப்பது" என்ற எழுத்துக்களைக் காணுகிறோம். சிந்தித்துப் பார்த்தால் இதன் பொருள் எவ்வளவு கேவலமானது? உறங்குபவன் தனக்கு உரியவள் அல்லாத ஒருத்தியைக் கனவிலே கண்டு துயில் கிறான் என்றால், அது எவ்வகைப் பண்பாகும்? பொருள் பற்றிச் சிந்தியா மலேயே எழுதிவிடுகிறோம், பேசி விடுகிறோம். இது தவிர்க்கப்பட வேண்டும்.

உயர்ந்த நிலையிலே இருப்பவர்களே ஆயினும், செல்வர்கள் ஆயினும், செல்வாக்கு மிகுந்தவர் ஆயினும், தகுதியற்ற சொற்களைப் பேசும் நாவைக் கொண்டி ருப்பின், அவர்கள் தாழ்ந்தவரேயாவர்! இழிவான சொற்களைக் கூறுவோர் பல பட்டங்கள் பெற்றவரேயாயினும், அவர்கள் இழிந்த குலத்தவரே என்பது வள்ளுவர் கருத்து. பண்புநலம் கனியப் பேசும் பழக்கத்தை வள்ளுவரின் இக்குறள் வலியுறுத்துகிறது. நாட்டு மக்கள் பின்பற்றி ஒழுகவேண்டிய மிகச்சிறந்த கருத்து இது.

"மக்கள் பொறையுடையவர்களாக இருக்கவேண்டும். பிறர் செய்யும் தீங்கையும் பொறுக்கவேண்டும். அத்தீங்கை நினைவில் கொள்ளாது மறந்து விடுதல் பொறுத் தலைவிட நல்லதாகும்" என்பதனைத் திருவள்ளுவர் நிலத்தைக்கொண்டு விளக்கு கிறார். நிலத்தை அகழ்கின்றார்கள்; தனக்கு ஊறு செய்கிறார்களே என்று அந்நிலம் வெகுண்டு அவர்களை அழிப்பதில்லை.

மாறாக, அகழ்வோர் நின்று கொள்ள இடத்தை நல்குகிறது. அது மட்டுமா? இன்னா செய்தார்க்கும் இனியவே செய்கிறது. தோண்டத் தோண்டத் தோண்டுபவர்கட்குப் பல பயனுள்ள பொருள்களை நல்குகிறது. நீரைத் தருகிறது; நிலக்கரியைத் தருகிறது; தங்கத்தைத் தருகிறது; எண்ணெய்யைத் தருகிறது; மேலும் ஏற்றமிகு பொருள்கள் எவ்வளவோ தருகிறது. அகழ்வாரைத் தாங்குவதோடு, அவர்கட்கு நன்மையையும் நல்கும் நிலத்தின் இந்தப் பண்பு வள்ளுவரால் பெரிதும் பாராட்டப்படுகிறது.

**"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வார் பொறுத்தல் தலை"**

நிலத்தின் மீது நின்றுகொண்டு அதே நிலத்தை வெட்டுவது போன்றே, நம்மால் புரக்கப்படுபவர்களே நம்மை இகழ்ந்து பேசவும் நேரலாம். அதை நாம் பொறுமை யுடன் தாங்கவேண்டும். ஒருவன் அகழ் வதினாலேயே நிலத்துக்கு அழிவு ஏற்பட்டு விடுவதில்லை. அகழ்ந்த அந்த இடம், வாளியாக, கூவலாக மாறிச் செம்மை பெறுகிறது. பிறர் இகழ்வதைப் பொறுமை யுடன் ஏற்றால், அது நமக்குப் பெருமை யாகவே முடியும்.

விசும்பில் உள்ள நீருக்கு நிறம், மணம், சுவை கிடையாது. அது கீழே வீழ்ந்து நிலத்தில் படியும்போது, சேர்ந்துள்ள நிலத்தின் தன்மைக்கேற்ப, நிறம், சுவை முதலியன மாறுபடுகின்றன. அதுபோன்றே ஒருவரின் தனித்த இயல்பான அறிவு சேரும்



இனத்திற்கேற்ப மாறுபடும் என்பதால், சிற்றினம் சேரக்கூடாது என வள்ளுவர் வலியுறுத்துகிறார். நல்லினம் சேர்ந்தால் நன்மை கிட்டும், பூவோடு சேரும்போது நாரும் மணம் பெறுதல் போல! சிற்றினம் சேர்ந்தாலோ அனைத்தும் அழியும், சாக்கடையிற் சேரும் பன்னீரும் சாக்கடை யாவது போல; ஆகவே ஆராய்ந்து இனம் சேரவேண்டும் என்பது அறிவிக்கப்படுகிறது.

**"நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும்**
**மாந்தர்க்கு**
**இனத்தியல்ப தாகும் அறிவு"**

களர் நிலம் விளைவுக்கு ஒவ்வாதது; வித்திய வித்தை முளைக்கவொட்டாமற் செய்வது. நிலம் என்ற பெயரில் ஒரு பரப்பைக் கொண்டிருப்பது தவிர, அதனால் பயனேதுமில்லை. கல்லாதாரை வள்ளுவர் களர் நிலத்தோடு ஒப்பிடுகிறார். அவர்கள் பிறப்பு எவ்விதத்திலும் பயனற்றது. இருந்தும் அவர்கள் இல்லாதவர்களே! களர் நிலத்தைப்போல அவர்களால் வடிவோடு உலவுவது தவிர, சமூகத்திற்குப் பயனில்லை,

**"உளரென்னும் மாத்திரையர் அல்லால்**
**பயவாக்**
**களரனையர் கல்லா தவர்."**

நாட்டில் கல்லாமையாகிய களரை இல்லாமையாக்கி, அதை நலம் கொழிக்கும் நன்செய்யாய் மாற்றும் பணியில் அரசன் அயராது உழைக்க வேண்டுமென வள்ளுவர் அவாவுகிறார்.

வலிமையும் பெருமையும் உடைய வராயினும் நமக்கு வாய்ப்பில்லாத இடத்தில் இருந்தால் மிக எளியவராலும் வெல்லப் பட்டு விடுவார். ஆண்மை செறிந்த யானை யாயினும் கால் புதையக்கூடிய வளர் நிலத்தில் சிக்கிக்கொண்டால், கேவலம், நரி கூட அதைத் துன்புறுத்தி மகிழும்.

**"காலாழ் களரில் நரியடும் கண்ணஞ்சா**
**வேலாள் முகத்த களிறு".**

எவ்வளவு வலிமை பொருந்திய வராயினும் ஏற்ற காலமும் இடமும் அமையாவிடில், எடுத்த செயலைச் சிறப்புற முடிக்க முடியாதவராகி விடுவார்.

சறுக்கு நிலங்களில் கவனமுடன் நடக்க வேண்டும்; இன்றேல் வழுக்கி விழ நேரிடும். அங்கு ஒரு கோலை ஊன்றி நடப்பது பாதுகாப்பாகும். வழுக்கல் நிலத்தில் கோல் ஊன்றி நடப்பதைப் பார்த்த வள்ளுவர், அதுகொண்டு ஒரு அரிய கருத்தை உரைக் கிறார். வாழ்க்கை ஒரு நீண்ட பயணம். அதில் நம்மை இடர வைக்கும் இடங்களும் இருக்கலாம். அவற்றைக் கடக்கும்போது உயர்ந்தோர்களின் மொழியினை ஊன்று கோலாகக் கொண்டால் இடரேதும் நேராது.

**"இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே**
**ஒழுக்க முடையார்வாய்ச் சொல்."**


விளைநிலத்தைக் கவனித்துப் பார்த்துப் பருவத்தில் செய்ய வேண்டியன செய்ய வேண்டும். உழுதல், எருப்பெய்தல், களை கட்டல், நீர்பாய்ச்சல், காத்தல் என்றவை களை முறைப்படி ஆற்ற வேண்டும். அவ்வாறு அடுத்தன செய்யாது சோம்பி யிருப்பானாயின் நிலம், பயனைத் தராது.


நிறைகாத்து ஒழுகும் புகழ்புரிந்த இல்லாளைப் பெற்ற ஒருவன் அவளை நாடோறும் பேணி, நகைமுகம் காட்டி, நலம் புனைந்துரைத்து, உளம் மகிழச் செய் வானேல் அவளும், கூடிமுயங்கிக் குறை வற்ற இன்பம் தருவாள். அவளைப் பிரிந்து காணாதிருப்பினோ, ஊடிக் கொள்வாள். இஃது இல்லத்தில் நிகழ்வது.

அதுபோன்று, நிலமங்கையை மணந் துள்ள உழவமகனும் நாடொறும் அவளைக்

**நாட்டின் பெருமையை வளர்க்கக் கல்வி அத்யாவசியம். அவர்கள் சுயமரியாதையுடனும் சுகமாகவும் வாழத் தொழில் வளர்ச்சி அவசியம்.**

**—தந்தை பெரியார்**





கண்டு- உர உணவு வேண்டுமா, நீராடையை நிறைவுறப் பெற்றிருக்கிறாளா; இல்லக் காப்பாகிய வேலை ஊன்றி உள்ளதா என்பன போன்ற அவள் தேவையறிந்து உதவவேண்டும். இன்றேல் அவளும் 'தன்னுடைய அலங்காரமாகிய பயிர்க் கோலம்' அழிந்து ஊடிவிடுவாள். அதன் விளைவு, விளைவு கிடைக்காது. மனையாளின் நலம் கவனியாதவன் போகமிழக்கிறான்; அது போன்றே நிலத்தைக் கவனியாதவனும் போகமிழக்கிறான்.

"செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்".

நம்மிடம் ஏதுமில்லை என்று ஏங்கியிருப்பாரைக் கண்டு நிலமங்கை சிரிக்கிறாள். இறகால் உடலை நீவிடில் நம் உடலெங்கும் மயிர் சிலிர்க்கும். அதேபோல், கொழுமுனை பட்டால் போதும், நிலமங்கை கூசி உடல் குழைந்து, பயிராகிய மயிர் சிலிர்ப்பாள். இதையறிந்து உழைத்து, உயர்வு தேடாது, சோம்பித் திரிபவர்களைப் பார்த்து இரக்கப்படும் நிலமங்கை சிரிக்காது என் செய்வாள்!


"இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்".

இக்குறளுக்கு ஓர் அரிய விளக்கம் போல அமைந்துள்ளது, தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுடைய ஒரு கவியரங்கப் பாடல்.

"எதுவும் இல்லையென ஏங்கியிருப்பாரைக் கண்டு,
எது இல்லை என் மகனே!
வெடித்திருக்கும் என் வயிற்றில் மண்வளம் பார்;
வெகுதூரம் அகழ்ந்திட்டால் வைரமணி வழங்கிடுவேன்;
வெகுளியாய் வாழாமல் வேளாண்குடி பெருக்கிடுக,
எனச் சிரித்து நிலமடந்தை நிற்கின்றாள்!
உழவர் திருமகனே! உணர்ந்திடுக புவிச் சிரிப்பு
உழைத்துப் பெற்றிடுக உடனடியாய்ப் புதுச் செழிப்பு!"

நம்பிக்கை மூலமாக, மனிதனால் மலையைக் கூட அசைக்க முடியும்.

—காந்தியடிகள்



# கைத்தறிக் கூட்டுறவாளர்


**வே. குணாளன், இ.ஆ.ப.,**

**இயக்குநர் - கைத்தறி துணிநூல் துறை**


**த**மிழ்நாட்டின் பாரம்பரியக் கலாச் சாரத்தில் கைத்தறித் தொழில் இன்றிய மையாத பங்கு வகிக்கின்றது என்பதுடன், துணிநூல் தொழில் துறையில் தமிழ்நாடு ஒரு தொன்மையான மாநிலமாக உள்ளது. இதில் கைத்தறிகள், விசைத்தறிகள் மற்றும் ஆலைகள் உள்ளடங்கியுள்ளன. இந்த மூன்று துறைகளும் செம்மையாக வளர்ந்து வருவதுடன், மாநில அரசு இம்மூன்று துறை களும் எந்தவிதப் பாகுபாடும் இன்றி வளர்ச்சி அடைவதற்குத் தேவையான உதவிகளை அளித்துவருகின்றது.

தமிழ்நாடு அரசு கைத்தறி நெசவாளரின் நலனிற்கான வெவ்வேறு திட்டங்களை வகுத்து, செயலாக்கம் செய்து நடைமுறைப் படுத்துவதில் முன்னோடியாகத் திகழ்கிறது. தமிழ்நாடு அரசு மத்திய அரசின் பல்வேறு வகை வளர்ச்சி மற்றும் நலத் திட்டங்களை முனைப்புடனும் செவ்வனேயும் செயல் படுத்தி, இதர மாநில அரசுகளுக்கு முன் மாதிரியாகத் திகழ்வதுடன், மத்திய அரசு நடத்தும் கைத்தறி வளர்ச்சி மையங்கள் மற்றும் தரமான சாயச்சாலைகள் ஏற்படுத் தும் திட்டத்தினைச் செயலாக்குவதில் தனித் தன்மை வகிக்கிறது.

கைத்தறி நெசவாளர்களின் நலனைப் பாதுகாப்பதிலும், மண்ணின் இப்புராதனச் செயல்திறனைப் பாதுகாத்து ஆக்கபூர்வ மாக்குவதிலும் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொணர்ந்த நெசவாளருக்குக் கைத்தறி வளர்ச்சித் திட்டங்களின்கீழ் தாராள உதவியளித்து அவர்களை மேம்பாடு அடையச் செய்வதிலும் கைத்தறி மற்றும் துணிநூல் இன்றியமையாத பங்கு வகிக்கிறது. சுமார் 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட தறிகள் 1439 பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் 4 இலட்சத்திற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை கூட்டுறவு அமைப்பின்கீழ் கொணரப் பட்டுள்ளன.

கூட்டுறவு அமைப்பில் கொணரப்பட்ட தறிகள் கைத்தறியில் அனைத்து ரகங் களையும் உற்பத்தி செய்வதுடன், இச் சங்கங்கள் 1995-96-இல் ரூ.435.76 கோடி மதிப்புள்ள 1233.86 இலட்சம் மீட்டர்கள் உற்பத்தி செய்து ரூ.455.66 கோடி மதிப்புள்ள 1193.78 இலட்சம் மீட்டர்கள் விற்பனை செய்துள்ளன.

மாநில நெசவாளர் கூட்டுறவுச் சங்கமும், பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் 1995-96-ல் பெற்ற நடைமுறை மூலதனம் ரூ.359.93 கோடிகளாகும். ரூ.400 இலட்சம் வட்டி மான்யமாக அளிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு, கைத்தறித் தொழிலிலுள்ள சிரமங்களைச் சீர்செய்வதற்கான விரிவான திட்டத்தின்கீழ் கைத்தறி வளர்ச்சி மையங்கள் மற்றும் தரமான சாயச்சாலைகளை ஏற் படுத்துகின்றது. 1995-96-ல் தமிழ்நாட்டில் 99 கைத்தறி வளர்ச்சி மையங்களும் 5 தரமான சாயச்சாலைகளும் அமைப்பதற்காக மத்திய அரசு ரூ.233.36 இலட்சம் நிதியுதவி அளித் துள்ளது.

★



**கைத்தறி ஆடை மக்களை ஒளி பொங்கச் செய்வதுபோல், நெசவாளர்களின் வாழ்க் கையில் ஒளி பொங்கச் செய்ய வேண்டியது நம் கடமை. உழவுக்கு அடுத்த இடம், கைத்தறித் தொழில் பெற்றிருக் கிறது. இதனைக் காத்திடுவது நமது கடமை.**

**—பேரறிஞர் அண்ணா**

# FINANCE (PENSION) DEPARTMENT

**G.O. No.463, Dated 31st July 1996**
**(Thadhu, Aadi 16, Thiruvalluvar Aandu 2027)**

**PENSION** - Classification of Dearness Allowances as Dearness Pay for purpose of Death Gratuity/Retirement Gratuity and raising the maximum limit of Gratuity from Rs.1 lakh to Rs.2.50 lakh - Revised Orders - Issued.

**READ - the following:-**

1. G.O. Ms. No.764, Finance (Pension) Department, dated 27.9.1995.
2. Government Letter No.68513/Pension/95-1, Finance, dated 13.11.1995

**ORDER:**

In the Government Order read above, as amended in the Government letter read above, orders have been issued that Dearness Allowance as indicated below (inclusive of the Dearness Pay at 20% of pay sanctioned in G.O.Ms.No.3, Finance (Pension) dated 3.1.1994) be taken into account along with pay for calculating retirement gratuity in respect of the employees retiring on or after 1.10.1995. This Dearness Pay shall also be applicable to the cases of death gratuity in respect of those who die in harness on or after 1.10.1995.

| Pay Range | Dearness Allowance to be added to pay for calculating Gratuity |
|---|---|
| (1) | (2) |
| 1. Basic Pay upto Rs.3,500/- per mensem | 97% of pay |
| 2. Basic Pay above Rs.3,500/- per mensem and upto Rs.6000/- per mensum | 73% of pay subject to a minimum of Rs.3395/- and maximum of Rs.4161/- |

2. The Government have also issued orders in the Government Order read above enhancing the existing ceiling on the maximum amount of retirement gratuity/death gratuity from Rs.1.00 lakh to Rs.2.50 lakhs with effect from 1.10.1995.

3. It was also ordered in the said Government Order that the said orders shall apply to all State Government employees including the teaching and non-teaching staff working under local bodies and aided educational Institutions, but excluding employees governed by University Grants Commission, All India Council of Technical Education scales of pay and the Teachers/Physical Directors/Librarians in Government and aided Polytechnics and Special Diploma Institutions.

4. The Government have now decided to extend the orders issued in the Government Order read above with retrospective effect from 1.4.1995. Accordingly, the Government direct that the orders issued in the Government Order read above on merger of Dearness Allowance for calculating the retirement gratuity/death gratuity and enhancing the maximum limit of retirement gratuity/death gratuity from Rs.1.00 lakh to Rs.2.50 lakhs in respect of those who retired/died while in service on or after 1.10.1995 be given retrospective effect from 1.4.1995.

5. The Accountant General is requested to rework the retirement gratuity/death gratuity in respect of employees retired/died on or after 1.4.1995 and issue authorisation for drawal of difference in gratuity without waiting for proposals from the pension sanctioning authorities.

(BY ORDER OF THE GOVERNOR)

**S. GURUMURTHI,**

SECRETARY TO GOVERNMENT

# பிறகட்சித் தலைவர்களுடன் தொடர்பு !

- திரு. எம். பக்தவத்சலம்

(முன்னாள் முதல்வர்)

**ப**ல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் சுமுகமான சமூக உறவு கொண்டிருப்பதில் தவறு ஒன்றுமில்லை. இதைப் பிரமாதப்படுத்துவதும், கற்பனையான குற்றச்சாட்டுக்களைக் கூறி இழிவுபடுத்த முயற்சிப்பதும் சரியல்ல.

ஒருவர் தமது கட்சிக் கொள்கைகளுக்கு முரணாகப் பிற கட்சிகளைச் சேர்ந்தவர்களுடன் தொடர்பு கொள்ளக் கூடாது. தமது கட்சிக் கொள்கைகளை எதிர்ப்பவர்களுடன் மறைமுகமாக உறவு வைத்துக் கொள்வதை நான் எதிர்க்கிறேன். கட்சிக்கும், கட்சிக் கொள்கைகளுக்கும் இவ்வாறு துரோகம் செய்வது மன்னிக்கக் கூடாத தவறு என்றே நான் கருதுகிறேன். ஆனால் வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களிடையே சமூக உறவுகள் கெட வேண்டும் என்று கூறுவதில் அர்த்தமில்லை.

முன்பு ஒரு சமயம் நாங்கள் டில்லிக்குச் சென்றிருந்த போது, மத்திய கவுன்சில் நடக்கும் இடத்தைப் பார்க்கப் போயிருந்தோம். ஏ. ராமசாமி முதலியார் மத்திய கவுன்சிலின் காரியதரிசியாக அப்போது இருந்தார். அவர் எங்களை வரவேற்றார்.



அவர் ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்தவர். ஆனால் எங்களை மிக்க அன்புடன் அவர் வரவேற்று உபசரித்தார்.

பி.டி. ராஜன் ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்தவர். அவர் எனது மனைவியின் சகோதரியைத் திருமணம் செய்து கொண்டவர். ராஜன் எனக்குச் சொந்தக்காரர் என்பதால், அவர் வேறு கட்சியைச் சேர்ந்தவராக இருந்தும் அவருக்கு நான் சலுகை காட்டுகிறேன் என்று சிலர் பிரசாரம் செய்தார்கள்.

உறவினரான அவரை நான் மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தராக்கப் போகிறேன் என்றே பேசினார்கள்.

காமராஜரே இது பற்றி என்னிடம் ஒரு முறை கேட்டார். "ராஜனைப் போடப் போகிறீர்களா?" என்று அவர் கேட்டார். இல்லை என்று நான் பதிலளித்தேன். தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரையே மதுரைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக நியமித்தேன்.

ராஜனின் குழந்தைகள் என்னிடம் மிகவும் அன்பு கொண்டவர்கள். ஆனால் அவர்களுடைய வீட்டிற்கு எப்போதாவதுதான் நான் செல்வேன்.

நாங்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், நெருங்கிய உறவினர்கள் என்றாலும் அரசியலில் வெவ்வேறான பாதைகளில் சென்றவர்கள். அரசியலில் ராஜனுக்கு நான் என்றைக்கும் விட்டுக் கொடுத்ததில்லை. அவரை எதிர்த்துப் பலமுறை பேசியிருக்கிறேன்.

1967-ஆம் வருடம் நடந்த பொதுத்தேர்தலில் ராஜனின் மகன் பழனிவேல் ராஜன் தி.மு.க.வின் சார்பில் சட்டமன்றத்திற்குப் போட்டியிட்டார். அவர் போட்டியிட்ட தொகுதிக்கு நான் சென்று அவரை எதிர்த்துக் கூட்டங்களில் பேசினேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தை நான் கடுமையாக எதிர்த்திருக்கிறேன். ஆனால் அண்ணாதுரையின் பிறந்த தின விழாவையொட்டிய ஒரு மலருக்கு எனது கட்டுரையைக் கோரியபோது மறுப்பு தெரிவிக்காமல் தந்தேன். பிறகு, எனது பிறந்த நாளையொட்டி சென்னையில் நடந்த ஒரு கூட்டத்தில் அண்ணாதுரை கலந்து கொண்டு என்னைப் பாராட்டிப் பேசினார்.

சட்டமன்றத்தில் கருணாநிதி எதிர்க் கட்சித் தலைவராக இருந்தபோது, திருக்குவளை என்ற இடத்தில் அவரது தாயின் பெயரில் கட்டப்பட்ட

ஒரு பிரசவ விடுதியைத் திறந்துவைக்க வேண்டும் என்று என்னை அழைத்தார். அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டு நான் சென்றேன். ஆனால் சட்ட மன்றத்தில் கருணாநிதி எங்களது ஆட்சி பற்றிக் கடுமையாகப் பேசுவார். நானும் சுடச்சுட அவருக்கு பதில் தருவேன்.

1970-ஆம் வருடம் தாம்பரத்தில் முதலமைச்சர் கருணாநிதியின் பிறந்த நாள் விழாக் கூட்டத்தில் பேச வேண்டும் என்று என்னை அழைத்தார்கள். அழைப்பை ஏற்றுக் கொண்டேன். முதலமைச்சர் என்ற வகையில் கருணாநிதியைப் பாராட்டிப் பேசினேன். அதில் தவறு ஒன்றுமில்லை. ஏதோ ஒன்றை எதிர்பார்த்து நான் அந்த விழாவில் பேசினேன் என்று சிலர் பிரசாரம் செய்தார்கள். கருணாநிதிக்கு பக்தவத்சலம் 'சலாம்' போடுகிறார் என்று ஒரு பத்திரிகை எழுதியது.

இதுவா கீழ்த்தரமான அரசியல்? பிறந்த நாள் வாழ்த்து தெரிவிப்பதில் என்ன தவறு? கருணாநிதி சார்ந்துள்ள தி.மு.க.வின் கொள்கைகளை நான் ஆதரித்தேனா? அவற்றை ஏற்றுக் கொள்ளுகிறேன் என்று கூறினேனா?

கொள்கை அளவில் ஒரு சந்தர்ப்பத்திலும் நான் விட்டுக் கொடுத்தது கிடையாதே? தி.மு.க.வின் இருமொழிக் கொள்கையை நான் தொடர்ந்து எதிர்த்து வந்திருக்கிறேன். மாநில சுயாட்சி, தனிக்கொடி கோரிக்கை, மதுவிலக்கு, காவிரி நீர் பிரச்சினை முதலியவற்றில் தி.மு.க.வின் நிலையை நான் எதிர்த்திருக்கிறேன். எனவே கொள்கை சம்பந்தப்பட்ட வரையில் நான் ஒருபோதும் விட்டுக் கொடுத்ததில்லை.

ஆனால், திருமணம் போன்ற குடும்ப நிகழ்ச்சிகளிலும் பிறந்த நாள் விழா போன்ற பொதுப்படையான நிகழ்ச்சிகளிலும் தி.மு.க. அல்லது இதர கட்சிகளைச் சேர்ந்தவர்களின் அழைப்பை ஏற்றுக் கலந்து கொள்ளுவதில் தவறு எதுவும் இல்லை.

இந்தியா உடைய வேண்டும் என்று பேசுபவர் ஈ.வெ.ரா. காந்தீய நெறிக்கு நூற்றுக்கு நூறு அவர் எதிரானவர். அவருடைய சிலையைக் காமராஜ் திறந்து வைத்தார்.

அண்ணாதுரையே, சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது காமராஜைத் தமது தொகுதியில் தண்டலம் என்ற இடத்திற்கு வருமாறு அழைத்தார். காமராஜ் சென்றார். தாரை, தப்பட்டைகள் முழங்க வரவேற்பு தரப்பட்டது. காமராஜ் அதை ஏற்றுக்கொண்டார்.

எனவே, கொள்கை சம்பந்தப்பட்ட விஷயங்களில் விட்டுக் கொடுக்காமல் பிறகட்சிகளைச் சேர்ந்தவர்களுடன் சமூக உறவுகளை வைத்துக் கொள்ளுவதில் தவறு எதுவும் இல்லை. அந்த உறவுக்கு அரசியல் அர்த்தம் கற்பிப்பது தான் தவறு.

**-'எனது நினைவுகள்' என்ற நூலிலிருந்து.**

---

**மறைந்த இந்தியப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி நினைவு நாளினையொட்டி, (31.10.1996) தமிழக அரசின் சார்பில் சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற 'தேசிய மறு அர்ப்பணிப்பு நாள்' நிகழ்ச்சியில், அவரது திருவுருவப் படத்திற்கு, வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு. மு.க.ஸ்டாலின், மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. பரிதி இளம்வழுதி, மாண்புமிகு செய்தி விளம்பரத் துறை அமைச்சர் திரு. முல்லை வேந்தன், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி சற்குண பாண்டியன், மாண்புமிகு சட்டப்பேரவை எதிர்கட்சித் தலைவர் திரு. சோ. பாலகிருஷ்ணன், செய்தித்துறை செயலர் மற்றும் இயக்குநர் ஆகியோர் மலர் அஞ்சலி செலுத்தி மரியாதை செலுத்தினர்.**





# சென்னை மேயர்கள்

இராசா சர் முத்தையா செட்டியார் 1933
லத்தன் 1934
அப்துல் அமீதுகான் 1935
ஸ்ரீராமுலு நாயுடு 1936-1937
ஜெ. சிவசண்முகம் பிள்ளை 1937-1938
கே. வெங்கடசாமி நாயுடு 1938-1939
எஸ். சத்தியமூர்த்தி 1939-1940
சி. பாசுதேவ் 1940-1941
ஜி. ஜானகிராம் செட்டி 1941
வி. சர்க்கரை செட்டியார் 1941-1942
சி. தாதுலிங்க முதலியார் 1942-1943
டாக்டர் சையது நியமத்துல்லா 1943-1944
எம். இராதாகிருஷ்ண பிள்ளை 1944-1945
என். சிவராஜ் 1945-1946
சுந்தரராவ் நாயுடு 1946-1947
யு. கிருஷ்ணராவ் 1947-1948
எஸ். இராமசாமி நாயுடு 1948-1949
டாக்டர் வி.வி. செரியன் 1949-1950
ஆர். இராமநாதன் செட்டியார் 1950-1951
சி.எச்.எஸ். சாகிப் 1951-1952
டி. செங்கல்வராயன் 1952-1953
பி. பரமேஸ்வரன் 1953-1954
ஆர். முனுசாமிபிள்ளை 1954
எம்.ஏ. சிதம்பரம் 1954-1955
வி.ஆர். இராமநாதன் 1955-1956
கே.என். சீனிவாசன் 1956-1957
திருமதி தாராசெரியன் 1957-1958
கே. கமலக்கண்ணன் 1958-1959
அ.பொ. அரசு 1959
எம்.எஸ். அப்துல்காதர் 1959-1960
வி. முனுசாமி 1960-1961
ஜி. குசேலர் 1961-1963
ஆர். சிவசங்கரமேத்தா 1963-1964
எஸ். கிருஷ்ணமூர்த்தி 1964
சி. சிட்டிபாபு 1964-1965
எம். மைனர்மோசஸ் 1965-1966
ஆர் சம்பந்தம் 1966-1967
டாக்டர் ஹபிபுல்லா 1967-1968
வேலூர் டி. நாராயணன் 1968-1969
வை. பாலசுந்தரம் 1969-1970
சா. கணேசன் 1970-1971
திருமதி. காமாட்சி ஜெயராமன் 1971-1972
ஆர். ஆறுமுகம் 1972-1973
திரு. மு.க. ஸ்டாலின் - 1996

# சிறுமையும் பெருமையும்

வயது முதிர்ந்த ஏழை வழிப்போக்கர் ஒருவர் சாலையிலே போய்க்கொண்டிருந்தார். அந்திப் பொழுதாகி இரவு நெருங்கிக் கொண்டிருந்தது.

எங்காவது தங்க இடம் கேட்கலாமென்று, கிழவர் ஒரு பெரிய வீட்டின் சன்னல் கதவில் தட்டினார்.

''தாயே, இராப்பொழுதைக்கழிக்க இடம் தாருங்கள்!'' என்று வேண்டினார்.

பணக்காரியான அந்த வீட்டுக்காரி, கிழவரின் குரல் கேட்டு வெளியே வந்தாள். கூச்சலிட்டுக் கிழவரை அவள் ஏசத் தொடங்கினாள்.

''நாய்களை அவிழ்த்துவிட்டு உன்னை விரட்டியடிக்கச் சொல்வேன். இரவில் தங்க இடம் கேட்டு இங்கே வராதே, நீ, ஓடிவிடு!'' என்று கத்தினாள்.

கிழவர் அங்கிருந்து விலகி நடந்தார். அடுத்தாற் போல் ஓர் ஏழையின் சிறு குடிசை இருப்பதைக் கண்டு அங்கே சென்று சன்னலில் தட்டினார்.

''தாயே, இராப்பொழுதைக்கழிக்க இடம் தாருங்கள்!'' என்று வேண்டினார்.

''பெரியவரே, உள்ளே வாங்க!'' என்று அந்த வீட்டுக்காரி கிழவரை உள்ளே அழைத்தாள்.'' இரவில் நீங்கள் எங்களுடன் தங்கலாம். ஆனால் இங்கேசப்தமாய் இருக்கும். இடமும் அதிகமில்லை, இதை நீங்கள் பொருட்படுத்த மாட்டீர்களென்ன நினைக்கிறேன்'' என்றாள்.

கிழவர் குடிசைக்குள் வந்தார். பரம ஏழைக் குடும்பம் என்பது தெரிந்தது. குழந்தைகள் நிறைய இருந்தனர். கந்தலாய்க்கிழிந்த பழைய சட்டைகள் போட்டிருந்தனர்.

''குழந்தைகள் ஏன் இப்படிக் கந்தலாய் உடுத்தியிருக்கிறார்கள்? புதிய சட்டைகள் தைத்துத் தரக் கூடாதா?'' என்று கிழவர் கேட்டார்.

''எங்கே போவேன் நான்?'' என்று அவள் பதிலளித்தாள். ''என்கணவர் இறந்துவிட்டார், தன்னந் தனியளாய் இருந்து இந்தக் குழந்தைகளை வளர்க்க வேண்டியிருக்கிறது... அன்றாடம் ரொட்டிக்குக்கூட கையில் காசு இல்லை. துணிமணிகளுக்கு எங்கே போவேன்?'' என்றாள்.

இதைக்கேட்ட கிழவர் மேற்கொண்டு பேசாமல் மௌனமாகி விட்டார். பிறகு வீட்டுக்காரி சாப்பாட்டை எடுத்து மேஜைமீது வைத்துக் கிழவரையும் தம்முடன் சேர்ந்து சாப்பிடுமாறு அழைத்தாள்.

''பெரியவரே, வந்து உட்காருங்கள், சாப்பிடுவோம்'' என்றாள்.

''தாயே, நன்றி! எனக்குப் பசிக்கவில்லை, சற்று முன்புதான் நான் சாப்பிட்டேன்'' என்றார் கிழவர்.

பிறகு தமது மூட்டையை அவிழ்த்து அதிலிருந்தவை யாவற்றையும் எடுத்துக் குழந்தைகளிடம் கொடுத்துச் சாப்பிடச் சொன்னார். அதன்பின் படுத்துக் கொண்டார்; உடனே தூங்கிவிட்டார்.

பொழுது விடிந்ததும் கிழவர் எழுந்து, தமக்குக் காட்டிய அன்புக்காக வீட்டுக்காரிக்கு நன்றி தெரிவித்தார்.

''அம்மையே, காலையில் செய்வதை அந்தியாகி, இருட்டும் வரை செய்து கொண்டே இருப்பாய் நீ!'' என்று சொல்லி வாழ்த்திவிட்டு அவளிடம் விடைபெற்றுக் கொண்டார்.

கிழவர் சொன்னதின் பொருள் அவளுக்குப் புரியவில்லை. ஆனால் அதைப் பற்றி அவள் கவலைப்பட்டுக் கொள்ளவில்லை. கிழவரை வழியனுப்பி வைத்துவிட்டுக் குடிசைக்குள் திரும்பி வந்தாள்.

''என் குழந்தைகள் கந்தலை உடுத்தியிருப்பதாய் இந்த ஏழைக் கிழவரே சொன்னால், ஏனையோர் என்னவெல்லாம் சொல்வார்கள்?'' என்று நினைத்துக்கொண்டாள்.

அவளிடம் கடைசியாய் எஞ்சியிருந்த சொற்ப அளவு துணியிலிருந்து ஒரேயொரு

சட்டையாவது தைப்பதென்று முடிவு செய்து கொண்டாள். இந்தத் துணியை அளந்து ஒரு சட்டைக்காவது போதிய அளவு என்று பார்ப்பதற்காகப் பணக்காரியான பக்கத்து வீட்டுக்காரியிடம் கஜக்கோல் கேட்டு வாங்கி வரச் சென்றாள்.

கஜக் கோலை வாங்கி வந்ததும் அவள் நேரே உக்கிராண அறைக்குச் சென்று அலமாரியிருந்து துணியை எடுத்து அளக்க ஆரம்பித்தாள். அவள் அளந்து செல்லச் செல்ல அந்தத் துணி நீளமாய் மேலும் மேலும் நீண்டு சென்றது. முடிவின்றி நீண்டு சென்றது. பகல் பொழுது பூராவும் அளந்து சென்றாள். அந்திப் பொழுதாகி இருட்டியதும் தான் முடிவடைந்தது.

தனக்கும் தன் குழந்தைகளுக்கும் தம் வாழ்நாள் முழுதுக்கும் போதுமான துணி தன்னிடம் இருக்கிறதென்று மகிழ்ந்து கொண்டாள்.

''வயதான பெரியவர் இதைத்தான் கூறிச் சென்றிருக்கிறார்!'' என்று இப்பொழுது கிழவருடைய வாழ்த்தின் உட்பொருளைப் புரிந்துகொண்டாள்.

அன்று அந்திப் பொழுதிலேயே கஜக்கோலை அவள் பணக்காரப் பக்கத்து வீட்டுக்காரியிடம் கொண்டு போய்க் கொடுத்தாள். வயதான பெரியவர் கூறிச் சென்ற வாழ்த்தின் விளைவாய்த் தனக்கு உக்கிராண அறை நிறைய துணி கிடைத்து விட்டதென்று நடந்தது எதையும் மறைக்காமல் அவளிடம் சொல்லிவிட்டு வந்தாள்.

''அடாடா! அந்தப் பிச்சைக்காரக் கிழவனை இரவில் என் வீட்டில தங்கச் சொல்லாமல் விரட்டியடித்தேனே!'' என்று நினைத்து வருந்தியவாறு அவசரமாய்த் தனது வேலைக்காரனைக் கூப்பிட்டாள்.

''சீக்கிரமாய் வண்டியைப் பூட்டி அந்தப் பிச்சைக்காரனிடம் வேகமாய் ஓட்டிச் செல். எப்படியாவது அந்தக் கிழவனைத் தேடிப்பிடித்து என்னிடம் அழைத்து வா! ஏழைகளுக்குத் தாராளமாய் உதவ வேண்டும். எப்பொழுதுமே நான் கூறிவரும் ஒன்று இது'' என்று சொல்லி அவனை அனுப்பி வைத்தாள்.

வேலைக்காரன் உடனே புறப்பட்டு வண்டியை விரட்டிக்கொண்டு கிழவரை தேடிச் சென்றான். மறுநாளன்றுதான் அவன் கிழவரைத் தேடிப் பிடிக்க முடிந்தது. ஆனால் கிழவர் திரும்பிவர மறுத்துவிட்டார்.

''ஐயோ நான் என்ன பாவம் செய்தேனோ!'' என்று வேலைக்காரன் புலம்பினான். ''கிழவரே உம்மை நான் அழைத்துச் செல்லாமல் திரும்பினால், என் எஜமான் சம்பளம் இல்லாமலே என்னை வேலையிலிருந்து விரட்டி விடுவார்'' என்று வருந்தினான்.



''தம்பி, நீ வருந்தாதே, உன் விருப்பப்படியே உன்னுடன் வருகிறேன்.'' என்று கிழவர் அவனிடம் சொன்னார்.

பிறகு வண்டியில் ஏறி அந்தப் பணக்காரியின் வீட்டுக்குத் திரும்பிச் சென்றார்.

பணக்கார வீட்டுக்காரி பொறுமை இழந்தவளாய் வெளி வாயிலில் நின்று கொண்டிருந்தாள். கிழவர் வந்து சேர்ந்ததும், தலை குனிந்து வணங்கியும் இனிமையாய்ச் சிரித்தும் அவரை வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றாள். உணவும் பானமும் அளித்து உபசரித்தாள். பிறகு மிருதுவான படுக்கை போட்டுக் கொடுத்தாள்.

''ஐயா, பெரியவரே, வசதியாய்ப் படுத்து உறங்க வேண்டும்!'' என்றாள்.

கிழவர் அந்தப் பணக்காரியின் வீட்டில் ஒரு நாள் முழுவதும், பிறகு இரண்டாம் நாளும், பிறகு மூன்றாம் நாளும் தங்கியிருந்தார். சாப்பிட்டும், பானம் அருந்தியும், தூங்கியும் தமது புகைக்குழாயை எடுத்துப் புகைபிடித்தும் வந்தார். பணக்கார வீட்டுக்காரி அவருக்கு வேண்டிய உணவும் பானமும் அளித்தாள். தேனொழுகப் பேசினாள். ஆனால் உள்ளுக்குள் புகைத்து கொண்டிருந்தாள்.

'இந்தக் கிழட்டுச் சனியன் எப்பொழுது என் வீட்டை விட்டுப் போய்த் தொலையப் போகிறதோ!' என்று தன்னுள் கூறிக் கொண்டிருந்தாள்.

கிழவரைப் போகச் சொல்வதற்கு அவளுக்குத் தைரியம் வரவில்லை. அவருக்காகச் செய்த இவ்வளவும் விரயமாகிவிடக் கூடாதே என்று பொறுமையாய் இருந்தாள்.

பிறகு அவள் பெரு மகிழ்ச்சி அடையும் வண்ணம் நான்காம் நாள் அதிகாலையில் கிழவர் அங்கிருந்து புறப்படத் தயாரானார். பணக்கார வீட்டுக்காரி வெளியே வந்து கிழவரை வழி அனுப்பி வைத்தாள். கிழவர் வாயைத் திறக்கவில்லை. மௌனமாகவே வெளிவாயிலை வந்தடைந்தாள், பிறகு மௌனமாகவே அதைக் கடந்து தெருவுக்கும் சென்றுவிட்டார். பணக்கார வீட்டுக்காரியால் அதற்கு மேல் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

''இன்று நான் என்ன செய்ய வேண்டும்? அதைச் சொல்லவில்லையே?'' என்றாள்.

## அட்டைப்பட விளக்கம்

**முதலாம் அட்டை:**

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் - தமிழ்நாடு அரசு இந்த ஆறுமாத காலத்தில் நிகழ்த்தியுள்ள அவனி புகழும் சாதனைகளும்.**

**இரண்டாம் அட்டை:**

**சாதனை நிகழ்த்தும் மாணவர்கள் (கட்டுரை 30ஆம் பக்கம்)**

**நான்காம் அட்டை:**

**தமிழகத்திற்கு வருகைதந்த மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களை, மாண்புமிகு தமிழ்நாடு கல்வியமைச்சர் அவர்களும், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேயரும் விமான நிலையத்தில் (திருச்சி) வரவேற்றனர் 31.10.1996**

''அம்மையே, காலையில் செய்வதை அந்தியாகி இருட்டும் வரை செய்து கொண்டு இருப்பாய் நீ!'' என்று கூறிவிட்டுச் சென்றார்.

பணக்கார வீட்டுக்காரி உடனே வீட்டுக்குள் ஓடி வந்து தன்னிடமிருந்த துணியை அளப்பதற்காக கஜக்கோலை அவசரமாய் கையில் எடுத்தாள்.

ஆனால் அத்தருணத்தில் பலமாய்த் தும்மினாள். வெளியே முற்றத்திலிருந்த கோழிக்குஞ்சுகள் பயந்து போய்ப் படபடத்துப் பறந்து நாற்றிசையிலும் ஓடும்படி அவ்வளவு பலமாய்த் தும்மினாள்.

அன்று பகற் பொழுது பூராவும் ஓயாது தும்மிக் கொண்டே இருந்தாள். ''உ-உச்-ச்சு! உ-உச்-ச்சு! உ-உச்-ச்சு!''...

அவளால் சாப்பிடவும் முடியவில்லை, பானம் அருந்தவும் முடியவில்லை, எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லவும் முடியவில்லை. எதற்கும் அவளிடமிருந்து ஒரே பதில்தான் வந்தது. 'உ-உச்-உச்சு! உ-உச்-ச்சு! உ-உச்-ச்சு!'

பொழுது சாய்ந்து இருட்டியதும்தான் அவளுக்குத் தும்மல் நின்றது.

**- சோவியத் மக்களது நாட்டுக் கதைகள்.**
**தொகுப்பு - 'நவத்தினமாலை' என்ற நூலிலிருந்து**
**''எஸ்தோனிய நாட்டுக்கதை''**

# அறிவியல் துளிகள்

தாய்மையடையும் ஒரு பெண்ணின் கருப்பையில் சிசுவின் எந்தப் பகுதி முதலில் உண்டாகும் தெரியுமா? தலைப் பகுதியும் வால்பகுதியும்தான்; இது எல்லாத் தாய்மார்களுக்கும் பொதுவானது.

மாறுகண் என்பது சிலருக்குப் பிறக்கும்போதே இருக்கும்; சிலபேர் வளர்ந்தபிறகு, கண் தசைகளின் செயல் இழப்பாலும் அப்படி உண்டாகும்; இந்த மாறுபாட்டை நீக்க இப்போது பல மருத்துவ முறைகள் வந்துவிட்டன.

கண்களில் இருக்கும் ஐரிஸ் தசையில் சில நிறமிகள் இருக்கின்றது. அவற்றின் நிறத்தன்மையைப் பொருத்தே கண்கள் கருமையாகவும் நீலமாகவும், பூனைக்கண் போலவும் அமையும்.

பாதரசம் என்பது 'சின்னபார் என்கிற சிவந்த தாதுவாகவே முதலில் கிடைக்கிறது; சில இடங்களில், பாறைகளினடியில் சிறுசிறு துளிகளாகவும் காணப்படும்.

ஃபிரிட்ஜுக்குள் ஒரு குறிப்பிட்ட அளவிற்குக் குளிர்ச்சி ஏற்பட்டதும் அதிலுள்ள கம்ப்ரசர் தானாகவே நின்றுவிடும். ஆகவே, நீங்கள் ஃபிரிட்ஜின் மின் இணைப்பை 24 மணி நேரமும் துண்டிக்காமல் வைத்திருக்கலாம். அதாவது, ஸ்விட்ச்சை அணைக்க வேண்டியதில்லை. ஆனால், ஃபிரிட்ஜ் 24 மணி நேரமும் இயங்காது.

திறந்த பாத்திரத்தைவிட, அழுத்தச் சமையல்கலத்தில் விரைவாகச் சமைக்க முடியும். அழுத்தச் சமை கலத்திற்குள் வளி அழுத்தத்தைப்போல் சுமார் 15 மடங்கு அதிக அழுத்தம் நிலவுகிறது. இதனால், கலத்திற்குள் அதிக வெப்ப நிலை தோன்றும்; உணவும் விரைவில் சமைக்கப்படும்.

தீப்பட்டுக் கொப்பளித்ததில் உள்ளது ஊனீர் எனப்படும்; தீப்பட்ட பகுதியில் இருக்கும் நுண்ணிய இரத்தக் குழாய்களின் சுவர்கள் பழுதடைவதாலும், அவற்றின் வெளிவிடும் தன்மை அதிகரிப்பதாலும்தான் பிளாஸ்மா என்ற திரவம் வெளியேறுகிறது. அதில் உள்ள ஊனீரே தீக் கொப்புளங்களைப் புடைத்தெழச் செய்வதாகும்.

அதிக வெளிச்சத்திலிருந்து அறையினுள் நுழையும் போது ஒரு சில நிமிடங்களுக்கு இருளாகத் தோன்றக் காரணம். அதிக வெளிச்சத்தில் இருக்கும் போது கண்களுக்குள்ளே அதிக ஒளி புகாமலிருக்க வேண்டி கண்களின் 'பாப்பா' ஐரிஸ் சுருங்கி ஒரு புள்ளியாகி விடுகிறது. அப்படியே சுருங்கிய ஐரிஸுடன் அறைக்குள் பிரவேசிக்கும் போது அறையில் ஒளி குறைவாக உள்ளதால் சுருங்கிய ஐரிஸின் வழியாக மேலும் குறைவாகவே ஒளி புகுவதால் அறை இருளாகத் தோன்றுகிறது. சிறிது நேரத்தில் ஐரிஸ் விரிந்ததும் அறை வெளிச்சமாகிவிடுகிறது.

> மானத்தைப் பற்றிக் கவலையில்லாதவன்
> எவ்வளவு படித்தவனானாலும் சரி;
> அவனுடைய படிப்பும் மானாபிமானம்
> உள்ளவர்களுக்கு ஆபத்தாகவே முடியும்.
>
> – தந்தை பெரியார்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : என்.எஸ். பழனியப்பன் இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
துணை இயக்குநர் : இரா.பா. கார்மேகம், உதவி இயக்குநர் :எம் அண்ணாமலை
ஆசிரியர் குழு : ஜி. லோகநாதன், எம்.வி.எம். அசோகன், அ. மதிமாறன், பி.எல். ராஜேந்திரன், ஜி. பாஸ்கரன், எஸ். ஜெயலலிதா
ஓவியர்கள் : என். குமாரசாமி, சி. ஜெயச்சந்திரன், பி. குமார், தி. சம்பத், தி. மகேஸ்வரி
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை - 600 002. தொலைபேசி எண் : 568926, 568927

# ஆசிரியர் மடல்

நடந்து முடிந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களின் மூலம் - 6 மேயர்களும், 474 மாநகராட்சி உறுப்பினர்களும், நகராட்சித் தலைவர்கள் 102 பேரும், நகரமன்ற உறுப்பினர்கள் 3392 பேரும், பேரூராட்சித் தலைவர்கள் 634 பேரும், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் 10,173 பேரும், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் 649 பேரும், ஊராட்சி ஒன்றியங்களின் உறுப்பினர்கள் 6,504 பேரும், சிற்றூராட்சித் தலைவர்கள் 12,584 பேரும், சிற்றூராட்சிகளின் உறுப்பினர்களாக 97,014 பேரும் பொது வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

இவர்கள் தவிர- சென்னை மாநகராட்சிக்கு 10 பேரும் - மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிகளுக்குத் தலா ஐந்து பேரும்- சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மாநகராட்சிகளுக்குத் தலா 2 பேரும் நியமனம் பெற உள்ளனர்.

இவர்களெல்லாம் சமுதாயத்தின் அடித்தட்டு மக்களுக்கு உதவக்கூடியவர்களும், பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளை உடனுக்குடன் தீர்த்து வைக்க வேண்டியவர்களும் ஆவர். அதாவது, உள்ளாட்சி மன்றங்களின் நிர்வாகம், கால் நூற்றாண்டுக்குப் பிறகு மக்கள் பிரதி நிதிகளின் கைக்கு வந்திருக்கிறது.

“தேர்வு பெற்றோர் கடமைகள் மகத்தானவை; மக்கள் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதே குறிக்கோளாகக் கொண்டு, எல்லோரும் செயல்பட வேண்டும்; தம் அதிகாரத்திற்குட்பட்ட ஆட்சியைத் திறம்பட நடத்தும் வல்லவர்களாக- துளிக் களங்கமும் வராமல் செயல்படும் நல்லவர்களாக அனைவரும் திகழ வேண்டும்” - என்றெல்லாம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அனைவரையும் கேட்டுக் கொண்டிருக்கிறார். அதன்படி அவர்கள் வளரவும் வாழவும் வாழ்த்துகிறோம்.





தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23

